# தொண்டன்

வைகாசி ★ 1987


நிலவென்னும் வதனம் நெற்றி
நெடுமழை அனைய கூந்தல்
மலரெனும் கண்கள் கைகள்
மரியம்மை அழகின் தெய்வம்
இலகுமோர் மணவி பூவை
எதிர்பார்த்து நின்ற காலே
அலகிலா இறைவன் செய்தி
அவள்முனம் தோன்றிற் றம்மா!

''பரிசுத்த ஆவி உன்மேல்
பரிவுடன் இறங்கி நிற்பார்
ஒருபத்து மாதம் சென்று
உன்மகன் பிறப்பான் அந்தத்
திருமுத்து விளக்கம் நாட்டில்
தேவகு மாரன் என்னும்
மருவற்ற பேரைப் பெற்று
வளம்பெறும்'' என்றான் ஆங்கே!

யூதர்கள் இடையே நாளும்
உலவிடும் தங்கக் கட்டி
மாதர்கள் பலபே ருண்டு
மரியம்மை தன்னை நாடித்
தூதுவன் சொன்னான் என்றால்
சுடர்விளக் கனைய கன்னி
மாதருள் மணியே அன்றோ!
மரியம்மை புனிதப் பெண்ணே!

--கவிஞர் கண்ணதாசன்
'இயேசு காவியம்'


கிறித்தவ இலக்கியத் திங்களேடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தொண்டன்

வைகாசி — 1987
மலர்: 19 இதழ்: 4

★

ஆசிரியர் :
சி. பி. இராஜேந்திரம்

இணை ஆசிரியர் :
மலர்வேந்தன்

ஆசிரியர் குழு :
பீ. ஜோசப்
ஏ. ஜி. இராஜேந்திரம்

வெளியீடு :
சமூகத் தொடர்புகள் நிலையம்,
திரி./மட். மறை மாவட்டம்

தொடர்பு :
சமூகத் தொடர்புகள் நிலையம்,
ஆயரகம்,
மட்டக்களப்பு.

## உள்ளே..


1. இதயத்திலிருந்து — 1
2. கனவுகள் கற்பனைகள் — 2
3. மனமாற்றமும் மத... — 6
4. செய்தி முரசு — 8
5. இன்றும் நிகழட்டும் — 10
6. கவிஆரம் — 12
7. சர்வதேச கத்தோலிக்க — 14
8. மணம் வீசும் மரியாள் — 16
9. திருமறையைத் தெரிந்து — 19
10. சொந்தம் எப்போதும் — 21
11. சுவைக்கச் சில துளிகள் — 24
12. குறுக்கெழுத்துப் போட்டி — 25
13. காற்றினிலே கலந்துவரும் — 27
14. உங்கள் பக்கம் — 28




## வாழ்த்துகிறோம்!

இத்திங்கள் 7ம் நாள் எமது மறை மாவட்ட ஆயர் பேரருட்டிரு ஜோசப் கிங்சிலி சுவாம்பிள்ளை அவர்கள் ஆயராக திருநிலைப்படுத்தப்பட்ட நான்காவது ஆண்டு நிறைவாகும். ஆயரவர்கள் இறையருள் நிறையப்பெற்று நல்லாயராய்ச் சிறக்க நெஞ்சார வாழ்த்துகிறோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## இறை வாக்கு

"நான் உங்களை திக்கற்றவர்களாக விடமாட்டேன்" அரு. 14/18.

# இதயத்திலிருந்து....

அழிவுகள்மேல் அழிவுகள் !

கரைபுரண்டோடிக் கொண்டிருக்கும் இவ்வழிவு வெள்ளத்தை யாரால்தான் தடுக்கமுடியும் ? ! அரசியல்வாதிகள் — ஆளுநர்களின் ஆவேசப் பேச்சுக்கள் மேலும் மேலும் அழிவுகளைத் தூண்டிக்கொண்டே இருக்கின்றன.

ரோம சாம்ராஜ்ஜியத்தில் அரங்குகளிலே நடந்த பயங்கரக் களியாட்டங்கள் போன்றுதான் எமது நாட்டு நடப்புகளும் தோன்றுகின்றன.

அங்கே, கிறித்தவர்களை மிருகங்களுக்கு இரையாகப் போட்டு வேடிக்கை பார்த்தனர். வீரர்களை ஒருவரை ஒருவர் அடித்து உயிர் பிரியும்வரை போராடச் செய்தனர். அந்தக் கோரக் காட்சிகளைப் பார்த்து குதூகலம் கொண்டு 'மேலும் மேலும் கொடூரமாகப் போராடுங்கள்' என்று கூக்குரலிட்டனர், கூடிநின்ற மக்கள்.

இன்று நமது நாட்டிலும் அப்பாவி மக்கள் குண்டுகளுக்கும், துப்பாக்கிச் சூட்டுகளுக்கும் பலியாவது நாளாந்த நிகழ்வாகி வருகிறது. இவற்றைத் தடுத்து நிறுத்தி மக்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டிய அரசியல்வாதிகளும், ஆட்சியாளர்களும் ஆவேசப் பேச்சுக்களை அள்ளி வீசியும் ஒருவர் எடுக்கும் முயற்சியை மற்றவர் தடுத்தும் அநியாய அழிவுகளில் இலாபம் தேட முயல்கின்றனர்.

உயிர்ச் சேதங்கள் பெருகிக்கொண்டிருக்கும் இவ்வேளை ஆவேசப் பேச்சுக்கு இடமில்லை. ஏட்டிக்குப் போட்டியாக இரத்தம் சிந்த வைப்பதும் முறையில்லை. இந்தப் பிரச்சினைக்கு எப்படித் தீர்வு காண்பது என்பதில்தான் அரசு கவனம் செலுத்தவேண்டும்.

மக்கள் படும் துயரங்கள் போதும் !

- சி. பி. இராஜேந்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கனவுகள் கற்பனைகள்

## சிறுகதை

மேகங்கள் தூறலாய்க் கரைந்துகொண்டிருந்தன.

காகம் ஒன்று அவசரமாய் தாழப்பறந்தது. விவேக் றெயில்வே ஸ்டேஷன் படிகளில் விரைந்து ஏறினான். தோளை டிரவலிங் பேக் கனமாய் அழுத்தியது.

கவுண்டரில் பண்டாரவளைக்கு டிக்கெட்டைப் பெற்றுக்கொண்டு மெதுவாய் புகையிரத மேடையை நோக்கி நடந்தான். ஸ்டேஷன் வெறிச்சோடிக் கிடந்தது.

நாய் ஒன்று மெதுவாய் சோம்பல் முறித்துக்கொண்டு றெயிலை வரவேற்க எழுந்து நின்றது. 'பொடி மெனிகே' குளிர்ந்த காற்றை அள்ளி வீசிக்கொண்டு சிணுங்கியபடி மெல்ல ஊர்ந்து வந்துநின்றாள். பெட்டிகள் பரவலாய் வெறுமையாய்க் கிடந்தன. விவேக் பெட்டியொன்றில் வசதியாய் ஏறி அமர்ந்துகொண்டான். கைக்கடிகாரத்தில் மணியைப் பார்த்தான். மணி 4.20. காலை 5.30க்கு ஆரம்பமானபயணம்.

மனசுக்குள் சலிப்பு தலை தூக்கியது.

கண்கள் தூக்கத்தை வரவேற்க காத்திருந்தன. ஸ்டேஷன் மாஸ்டர் விசிலடித்தார். கார்ட் பச்சைக்கொடி காட்டினார்.

பொடிமெனிக்கே சிணுங்கினாள்.

அம்மா என்ன செய்து கொண்டிருப்பார்? மனம் எண்ணியது. காலை 3.00 மணிக்கு விழித்தெழுந்து, சமையலிலிருந்து - அவனுக்கு தேவையான எல்லாவற்றையும் கவனமாக எடுத்துவைத்து - அவனை முகமலர்ச்சியோடு அனுப்பி வைத்த அம்மா மகனுக்கு மாறுதல் கிடைத்ததையெண்ணி அவளுக்கு சற்று மனவருத்தம். முதல் வேலையாக வீடு ஒன்றை வாடகைக்கு எடுத்து தாயை கூட்டிவர வேண்டும். விவேக் முடிவு செய்தான். இரண்டு பஸ்களில் மாறிமாறிப் பயணம் செய்து 'அம்பேவல' ஸ்டேஷனில் 'பொடிமெனிக்'கேயைப் பிடித்ததற்குள் அவன் நன்றாகக் களைத்துவிட்டான்.

விஞ்ஞான ஆசிரியனை அவனை பண்டாரவளை தமிழ் மகா வித்தியாலயத்திற்கு மாற்றியிருந்தார்கள்.

பொடிமெனிக்கே நின்றாள் நடந்தாள் - ஓடினாள். தேயிலை மரங்கள் பச்சைக் கம்பளமாய் மலைகளை மூடிக்கிடந்தன. வானொலியில் மாலைச் செய்தியை யாரோ வாசிப்பது இலேசாகக் கேட்டது. விவேக் தூங்கிப்போனான்.

நிமிர்ந்து உட்கார்ந்த போது எதிர்வரிசையில் உட்கார்ந்தவர்களை க்கவனித்தான். தாய், மகன், மகள் — அவள் ரோஜாவைப்போல் அழகாயிருந்தாள். அவ்வளவு அழகான பெண்ணை அவன் வாழ்வில் இவ்வளவு நெருங்கிய தூரத்தில் அவதானித்தது இதுதான் முதல் தடவை. அவள் சிங்களத்தில் தம்பிக்கு என்னவோ கூறிட தாயும் தம்பியும் சிரித்தார்கள்.

விவேக் மணியைப் பார்த்தான் 7.42. விவேக் விழித்துக்கொண்டதை அவர்களின் தாயார் முதலில் கவனித்தாள். சிநேகமாய் அவனைப்பார்த்து முறுவலித்தாள். அவனும் சிரித்தான்.

நல்ல தூக்கமா? தாய் சிங்களத்தில் கேட்டாள். கேட்டது விளங்கவில்லை, விவேக் வெட்கத்தோடு சிரித்தான் — அவள் திரும்பிப்பார்த்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## நவநீதன்

மனது குறுகுறுத்தது எவ்வளவு அழகான விழிகள். மனம் கவிதைபாட துடித்தது.

'மகன் எங்கே போறீங்க? தாய் சிங்களத்தில் சம்பாஷணையைத் தொடர்ந்தாள். அவன் சங்கடமாய் அவர்களைப் பார்த்தான். பின் தனக்குத்தெரிந்த அரைகுறை சிங்கள அறிவை சேர்த்து சிங்களத்தில் ''எனக்குச் சிங்களம் தெரியாது'' என்றான். அவள் மெல்லச் சிரித்தாள். குறும்பு அதில் எதிரொலித்தது.

'இப்போது என்ன பாஷையில் நீங்கள் பேசினீர்கள்' ஆங்கிலத்தில் அவள் கேட்டாள்.

'நிலும்' - தாய் புன்சிரிப்புடன் அவனைப் பார்த்துக் கொண்டு மகளை அதட்டினாள்.

எனக்குத் தெரிந்த சில சிங்களச் சொற்கள் அவ்வளவுதான்' விவேக் ஆங்கிலத்தில் சற்று கூச்சத்தோடு கூறினான்.

'உங்களுக்காவது ஏதாவது தெரிந்திருக்கிறது. எங்களுக்கோ ஒரு தமிழ்ச் சொற்களும் தெரியாது' நிலும் வெட்கத்தோடு கூறினாள்.

'என் பெயர் விவேக்' தன்னைச் சுருக்கமாக அறிமுகப்படுத்தினான்' விவேக்.

அம்மா - ரேஷான்-நிலும் கண்களை அகலவிரித்து ஒரு சிரிப்போடு தங்களை அறிமுகப்படுத்தினாள் நிலும்.

குளிர்காற்று யன்னலினூடு எட்டிப்பார்த்தது. மின்மினிப் பூச்சிகள் இரண்டு ஒளிப்பூக்களாய் உயரப் பறந்தன. நிலுமின் தாய் பிளாஸ்கிலிருந்து கோப்பியை ஊற்றி ஒரு கோப்பையை அவனுக்கு நீட்டினாள்.

விவேக் கூச்சத்தோடு வாங்கிக்கொண்டான்.

'கோப்பி குடிக்க இவ்வளவு கூச்சம் வேண்டாம்' - நிலும் அவனைச் சீண்டினாள்.

'அக்கா போட்ட கோப்பியில்லை அங்கிள். பயப்படாமல் குடியுங்கள் - ஆஸ்பத்திரிக்குப் போக நேரிடாது' என்றான் ரேஷான்.

எல்லோரும் சிரித்தார்கள். நிலும் தம்பியின் காதை செல்லமாய் முறுக்கினாள். இதமாய் இனித்தது கோப்பி.



அவன் குடித்து நீட்டிய கோப்பையை நிலும் வாங்கினாள். அழகிய நீண்ட விரல்கள். பைரனும், ஷெர்லியும், ஷேக்ஸ்பியரும் நினைவிற்குள் வந்துபோனார்கள்.

நிலும் கழுத்திலிருந்த 'மப்ளரை' ஒழுங்குபடுத்திக் கொண்டு கேட்டாள்.

'குளிராயிருக்கின்றது இல்லையா.

அவன் தலையாட்டினான்.

அங்கிள் கோப்பி ஏதும் செய்கிறதா? ஏன் பேசமாட்டேன் என்கிறீர்கள்? ரேஷான் கேட்டான்.

விவேக் 'இல்லையே' என்றான்.

'அப்பாடா - அக்கா போட்ட கோப்பி - ரேஷான் முடிக்குமுன் எல்லோரும் சிரித்தார்கள். நிலும் வெட்கத்தோடு அவனைப் பார்த்தாள்.

'அருமையான கோப்பி'என்றான் விவேக்.

'தாங்ஸ்' என்றாள் நிலும்.

'நான்தான் உங்களுக்கு நன்றிகூற வேண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

டும்' விவேக் முடிக்குமுன் தாயார் அவசரமாய் ஏதோ சிங்களத்தில் கூறினாள். நிலு மின் முகம் அச்சத்தைக் காட்டியது.

ரெயின் திடீரென நின்றது.

'தமிழனைக் கொல்லுங்கடா - பறத் தமிழனைக் கொல்லுங்கடா' எங்கும் ஒரே கூச்சலும் குழப்பமும். டோர்ச் லைட்டுகள் திடீரென காட்டுப் பகுதியிலிருந்து வண்டியை நோக்கி ஓடிவந்தன.

கத்திகள் —

தடிகள்

வாள்கள்

உடைந்த போத்தல்கள்

எங்கும் ஒரே கூக்குரல் — தடதடலென்று பலர் அவர்களிருந்த பெட்டியை நோக்கி ஓடிவந்தார்கள்.

'எங்கேயடா தமிழன் — பறத் தமிழன்' கோபத்துடன் கத்தியபடி ஒருவன் அவர்களிருந்த வண்டிக் கதவைத் தள்ளி திறக்கமுயன்றான்.

அப்போதான் அந்த அதிசயம் நடந்தது.

நிலும் திடீரென அவன் அருகில் வந்து உட்கார்ந்து தன் மப்ளரை எடுத்து அவன் கழுத்தைச் சுற்றி கட்டி, ஏதும் பேசுமுன் அவன் தலையை அவளுடைய தோளில் சாய்த்துக் கொண்டாள்.

'மே மகே மாத்தயா - ஏயாட்ட சனிப்ப நே' (இது என்னுடைய கணவர் சுகமில்லை) - நிலும் சிங்களத்தில் கத்தினாள்.

வந்தவர்கள் அடுத்த பெட்டியை நோக்கி ஓடினார்கள். எல்லாம் சில நிமிட நேரத்திற்குள் நடந்துவிட்டது. எங்கும் ஒரே கூச்சலும் குழப்பமுமாயிருந்தது.

ரெயின் திடீரென ஓடத்தொடங்கியது. அச்சத்தால் உறைந்துபோனது விவேக்கின் இதயம். விவேக் தலையை நிலுமின் தோளிலிருந்து - அசைக்க முயன்றான் நிலும் விடவில்லை. இதமான நறுமணம் அவளுடலிலிருந்து வீசியது. இந்த மண்ணில் இன்னமும் தாய்களும், சகோதரிகளும் அற்றுப்போகவில்லை. அவன் நன்றியோடு நினைத்துக்கொண்டான். நிலும் அவள் தலையைப் பற்றியிருந்த கையை எடுத்துவிட்டாள். விவேக் எழுந்துகொண்டான். அவன் கண்களில் நீர் கோத்திருந்தது - அவர்கள் மூவரின் முகத்திலும் கவலை படர்ந்திருந்தது. விவேக்கிற்கு வார்த்தைகள் வரவில்லை. நிலுமின் கைகளைப் மெல்லப் பற்றிய வாறு 'நன்றி' என்றான் விவேக்.

'நாங்கள் வெட்கப்படுகின்றோம். மெய்யாகவே வருந்துகின்றோம். இத்தகைய காட்டுமிராண்டித்தனமான செயல்களுக்கு' அவள் குரலில் வேதனை இழையோடியது.

மலைநாட்டில் குழப்பங்கள் தலைதூக்கியுள்ளன என்பதை பத்திரிகைகளில் அறிந்திருந்த விவேக் ரெயிலை நிறுத்தி தாக்குமளவிற்கு மிக மோசமாகும் என எண்ணிப் பார்க்கவில்லை. பல பெட்டிகளில் அழுகையொலிகளும், கூக்குரல்களும் கேட்டவண்ணமிருந்தன. விவேக் எழ முயன்றான்.

'எங்கும் போகவேண்டாம்' அமைதியாக இருங்கள்' நிலுவின் தாயார் வேதனையோடும், கவலையோடும் கூறினாள்.

நிலுமிற்கு நெஞ்சு படபடத்தது. எப்படித்தான் துணிந்தோம் இவரைக் காத்திட. வெட்கத்தோடு பயமும் எழுந்தது. எழுந்து தாயை அணைத்தபடி மெல்ல விசும்பினாள்.

வந்தவர்களின் இரத்தக் கறை படிந்த உடைகளும், மது நெடியும், ஆயுதங்களும் அவளை இப்போது பயமுறுத்தின.

தாய் பாசத்தோடு அவளை அணைத்துக்கொண்டாள். விவேக் வேதனையோடு அவளைப் பார்த்தான். அவனுக்கு புரியவில்லை. 'ஏன் அழுகிறாள்' நிலும்.

> அழுக்கு உடை, அறிவுச் சுருக்கம், அழகுக் குறை இவை தனிமனிதனை அன்பு செய்யத் தடையானது அல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

'அம்மா சொல்லுங்கள் நிலுமை அழவேண்டாம்' என்று விவேக்கின் குரல் உடைந்து ஒலித்தது.

தாயின் சேலைத் தலைப்பில் கண்களைத் துடைத்துக் கொண்டு அவனைப் பார்த்து சிரித்தாள்.

'நான் மிகவும் பயந்து போய்விட்டேன்' என்றாள் மெதுவாக நிலும்.

விவேக்கின் நெஞ்சிற்குள் வலி பிறந்தது. ரெயின் நீண்ட நேரம் ஓடியது. திடீரென ரெயினின் வேகம் மெல்லக் குறையத்தொடங்கியது. எங்கிருந்தோ 'பழிக்குப்பழி சிங்களவனை அடிங்கடா' சப்தங்கள் வலுக்கத் தொடங்கின. கற்கள் சாரமாரியாய் வண்டியைத் தாக்கின.

விவேக் ஒருகணம் அதிர்ந்து போனான்.

திடீரென யன்னலினூடாக வந்த கல் ஒன்று அவன் தலையைத் தாக்கியது. இரத்தம் மெல்லக் கசிந்தது. அவனின் திகைப்பு நீங்குமுன் எங்கும் ஒரே குழப்பம் - கூச்சல் அடுத்த பெட்டியிலிருந்து ஒரு கும்பல் இவனுடைய பெட்டியை நோக்கி ஓடிவந்தது.

திடீரென தன்னுடைய தலையிலிருந்து வடிந்த இரத்தத்தை விரலில் ஒற்றி நிலுமின் நெற்றியில் திலகமிட்டான். அவளுடைய தாயாரை சேலையைப் போர்த்துக்கொள்ளும்படி கூறிவிட்டு ரேஷானையும் நிலுமையும் தனக்குப் பின்னால் மறைத்துக்கொண்டு 'நாங்கள் தமிழர்கள்' என்று கத்தினான்.

'பின்னால் இருப்பவர்கள்' ஒருவன் கேட்டான். 'அவர்களும் தமிழர்கள் இதோ' என்று நிலுமின் பொட்டிட்ட முகத்தை காட்டினான்.

அவள் விழிகளில் தெரிந்த மிரட்சி அவளைக் காட்டிக் கொடுத்தபோது.

திடீரென ஒருவன் தடியால் ரேஷானை யன்னலூடாக அடித்தான்.

'மகே அம்மே' என அவன் கத்தியது இருளில் பலமாய் கேட்டது. அதுவே அவர்களை அடையாளம் காட்டியது. விவேக் கெஞ்சினான்.

ஐயா என்னை இவர்கள் தான் சற்றுமுன் காப்பாற்றினார்கள். தயவுசெய்து விட்டு விடுங்கள்.

அவர்கள் கேட்கவில்லை. கதவை திறக்க முயற்சித்தார்கள் விவேக் பலமாக அழுத்தினான்.

'முடியாது உள்ளே விடமாட்டேன்' சரிதான் போய்யா ரெயின் திடீரென அசையத் தொடங்கிட அவர்கள் வெறி கொண்ட மட்டும் யன்னலினூடாக தடியால் அடித்தார்கள். கற்களால் எறிந்தார்கள். எல்லாவற்றையும் விவேக் தாங்கிக்கொண்டான்.

ரெயின் ஓடத் தொடங்கியது. விவேக் மெல்லச் சரிந்து விழுந்தான். யாரோ அவனை அணைத்துக்கொண்டார்கள்.

விவேக் விழித்துக்கொண்ட போது தலை பலமாக வலித்தது. கைகளை அசைக்க முடியவில்லை.

எங்கே இருக்கிறேன் மனம் கேட்டது. வாய் 'அம்மா' என அழைத்தது. டெட்டோல் நெடி மூக்கை துளைத்தது. மெல்ல எல்லாம் புரிவது போலிருந்தது.

யாரோ டாக்டரை அழைத்தது கேட்டது; எல்லாம் மங்கலாய் தெரிந்தன.

அம்மா தெரிந்தாள். அன்பைத் தவிர வேறெதுவுமே தெரியாத அம்மா 'அம்மா' வாய்நிறைய கூப்பிட்டான்.

யாரோ அவனை நோக்கி குனிந்தார்கள். 'நிலும் நிலும்' ஐயத்தோடு அவன் கூப்பிட்டான். கழுத்திலிருந்த ஸ்டெதஸ்கோப்பை கழற்றிவிட்டு அவன் கண்களை நோக்கி குனிந்து நிலும் மகிழ்வோடு சிரித்தாள்.

'விவேக் நான் நிலும்' அவள் கண்களிலிருந்து உதிர்ந்த கண்ணீர் அவள் உதடுகளை ஈரமாக்கியது.

அவள் கைக்குட்டையால் அவன் உதடுகளைத் துடைத்திட முற்படவே அவன் கண்களால் வேண்டாம் என்றான்.

அவள் முகத்தில் கேள்விக் குறி எழுந்தது. 'நெஞ்சு இனிக்குது நிலும்' என்றான் விவேக்.

(முற்றும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மன மாற்றமும், மத மாற்றமும்

(இரண்டாவது வத்திக்கான் சங்க ஒளியில் ஒரு ஆய்வுரைக் கண்ணோட்டம்)

- புளியடிக்குடா ஆனந்தா A. G. இராஜேந்திரம் -

இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்குப் பிறகு கத்தோலிக்கரல்லாத பிற சமய மக்களது மறை வாழ்வு, அவர்களது விமோசனம், ஆகியன குறித்துப் பரவலான முன்னேற்றகரமான - வரவேற்கத்தக்க கருத்துக்கள் முன் வைக்கப்பட்டுள்ளன. கத்தோலிக்க திருச்சபை தவிர்ந்த வேறெங்கும் கடவுளுடைய பிரசன்னத்தை உணரமுடியாது, இதனால் அவரை அறிந்து, அவரோடு ஒன்றிக்க முடியாது; அப்படியான மனித சமுதாயத்திற்கு விமோசனமில்லை - ஞானஸ்நானம் ஒன்றே வான்வீட்டு வாயிலைத் திறந்து விடக் கூடிய திறவுகோல்; அதன் மூலமே அவனது கறையான குறைகள் நீங்கி, அழுக்கற்ற ஆன்மா வரப்பெற்று இறைவனோடு ஒன்றிப்பான் என்ற கொள்கைகளால் கத்தோலிக்க திருச்சபை முன்னொரு காலத்தில் நிரம்பி வழிந்தது.

அதன் பலனாய் மதமாற்றம் அவசியமானதெனக் கருதப்பட்டு, திருமுழுக்கு அருவி போல் பெருக்கெடுத்து ஓடியது. அதனால் திருச்சபைக்குள் அரிசிக் கத்தோலிக்கர் (சாப்பாட்டுக்காக மதம் மாறியவர்கள், கல்விக் கத்தோலிக்கர் (ஆங்கில மற்றும் உயர் படிப்பிற்காக மதம் மாறியவர்கள்) என்றெல்லாம் பலவகைக் கத்தோலிக்கர் உருவாகினர். நாளடைவில் இவர்களுள் பெரும்பாலோரது மறை வாழ்வு ஆட்டம் கண்டது, புதுமைகள் தேடி புது மேய்ச்சல் நிலந்தேடி இவர்கள் அலையலாயினர்.

திருச்சபை சிந்திக்கத் தலைப்பட்டது. எது முக்கியமென ஆராயமுற்பட்டது. மனம் மாறுவதா, மதம் மாறுவதா மனித உய்விற்கு அடிப்படையானது?

இவ்வாறான சிந்தனையின் பலனாய் மற்றய மறைகளைப் பற்றியும் அது ஆராயப் புகுந்தது. ஏலவே இருந்த ஆய்வுகள் விஸ்தரிக்கப்பட்டன. இதனால் விளக்கம் கிட்டியது, தெளிவு பிறந்தது.

மலைமுகட்டில் தோன்றும் நதிகள் முடிவில் கடலில் சங்கமம் காணவில்லை? உலகத் தாயின் மடியில் உருவாகும் மதங்கள் முடிவில் இறைவனையே சங்கமிக்கின்றன என்ற உண்மை விளங்கிக்கொள்ளப்பட்டது. இதனால் திருச்சபைக்கு வெளியிலும் மீட்பும், விமோசனமும் உண்டு என்று படிப்பினை உணர்த்தப்பட்டது.

பழைய ஏற்பாட்டிலே இறைவனை மக்கள் சந்தித்த இடங்கள் எங்கே என்று கேள்வி எழுப்பினால் கிடைக்கும் விடை - மலைகளும், குன்றுகளும் என்பதுதான்! ஆபிரகாம், மோயீசன், எலியாசு இப்படி எத்தனை எத்தனையோ இறைதாசர்கள் இறைவனைச் சந்தித்ததும், உறவாடியதும் மலையிலேதான்! புதிய ஏற்பாட்டிலே சமாரியப் பெண்ணுடன் கிறீஸ்து கிணற்றடியிலே உரையாடும் போது 'இறைவனை மலைமேல் மட்டுமல்ல அனுபவிப்பது' என்று கூறினாலும், அவர் மறுரூபமாகி இறைவனுடன் தன்னை அடையாளம் காண்பிப்பது குன்றிலே தான். கல்வாரிக் குன்றிலேதான் அவரது மீட்புச் சரிதையின் கடைசி அத்தியாயங்களை வரைந்தும் முடித்தார். எனவே, எங்கும் நிறைந்தவரானாலும், இறைவனுக்கும் மலைக்கும் தொடர்புண்டு! மலை - உயர்ந்த இடம் - அங்கேதான் உயர்வான இறைவனைச் சந்திக்கலாம் என்ற தொடர்பைக் கூறமுடியும்.

இந்து சமயம் குன்றிருக்குமிடமெல்லாம் குமரன் (முருகக்கடவுள்) இருக்குமிடம் என்கிறது. அது மட்டுமல்ல சுமார் 4, 5 வருடங்களின் முன் கிறிஸ்தவ சபையர் மூலம் தென்னிந்தியாவினின்றும் இங்கு வரவழைக்கப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தனது சாட்சியத்தின் மூலமாகக் கிறிஸ்தவத்தை ஆழப்படுத்த உழைத்த ஒரு பிரசாரகர் தன் சிறு பருவத்தே இந்துப் பிராமணராக வேதம் ஓதக் கற்றுக் கொண்டபோது, சமஸ்கிருத சுலோகங்களைத் தமிழில் ஆராயமுற்பட்டு கிறிஸ்துவைக் கண்டு கொண்ட வரலாற்றைச் சொன்னார். கன்னியின் வயிற்றில் உதித்தவனே. மூவொரு தெய்வமானவனே திரிசூலம் (போன்ற சிலுவை) ஆயுதத்தால் விமோசனம் தந்தவனே, மனுவுருவாக வந்த இறைவனே என்றெல்லாம் ஆரம்ப சுலோகங்கள் மொழிபெயர்க்கப்படலாம் என்று பகிரங்கமாக எடுத்துச் சொன்னார்.

புத்த மத மறைநூலொன்றிலே, புத்தரது இறுதிநேர வாழ்வு விபரிக்கப்படும்போது, அழுது நின்ற தம் நெருங்கிய சீடருக்கு அவர் தேறுதல் கூறுகிறார். "அழவேண்டாம் விரைவில் (மத்திய கிழக்குத் திசையிலே) சமாதானத்தின் இளவரசன் தோன்றவிருக்கிறார்" என்று தேற்றுகிறார் எனக் குறிப்பிட்டுள்ளதாக அனதப்படித்தவர்கள் கூறக்கேட்டுள்ளேன்.

இஸ்லாம் மார்க்கம் 'அல்லாஹ்ஹு அக்பர்' என்று முழங்கி ஏகதெய்வத்தை போற்றுவது மட்டுமல்ல, ஆதாம் ஏவை காலம் முதல் ஈசா(நபி) என்று இயேசு மரியம் (மையின்) மகனுகப் பிறந்தது, போதித்தது, அவர் கடவுளுக்குப் மிகவும் பிரியமானவரான இறைவாக்கினராதலால் சிலுவை மரணத்து அவமானத்திற்குட்படுத்தப்படாமல் மேலே எடுக்கப்பட, அவர்போல ஒருவரை அப்படிக் கொல்கிருர்கள் என்பதையெல்லாம் குர்-ஆனில் கொண்டிருப்பதுடன். ஈசா (நபி) - இயேசு - உலகமுடிவில் மீண்டும் வருவார் என்றும் எழுதியுள்ளது.

எனவே பாதைகள் வேறு, ஆனல், போகும் பயணம் என்றும் ஒன்ருகும் என்ற அடிப்படையில் இறைவனை எல்லோரும் தத்தம் வழிகளில் உணர்ந்து, அனுபவித்து, வாழ்கிருர்கள். (வான் வீட்டில் பலகடவுள்கள் என்ருல் அங்கு கூட யுத்தமல்லவா நடக்க வேண்டும்? அப்படி நடந்ததாக அறியப்படாத வரை), ஓரே கடவுள், அவர் படைத்த மனிதன், தன் பிறப்பினுலே மற்றைய மறைகளில் அடையாளம் காணப்படுவதன் பொருட்டு விமோசனம், மீட்பு அற்றவன் என்று சொல்வதை ஏற்கவே மாட்டார் - என்ற இவ்வாறுன பரவலான அடிப்படையில் திருச்சபை சிந்தித்தது.

எந்தப் பாதையானுலும், மனத்தூய்மை ஒன்று தேவை என உணரப்பட்டது. மனம் மாற்றம் ஏற்படாதவரை, மதமாற்றத்தாலும் பயனில்லை என்று தெளிவாக்கப்பட்டது. இது உண்மையே! இதனுல் மதமாற்றம் வேண்டப்படவில்லை, அது அவசியமில்லை - என்கிற உணர்வும் பலமாகத் தலைதூக்கிற்று - இதைத் திருச்சபை விரும்பவில்லை என்றும் ஒரு கால கட்டத்தில் வலியுறுத்தப்படலாயிற்று.

ஆனுல், இது தவறு! திருச்சபை மத மாற்றத்தை நிராகரிக்கவுமில்லை, அவசியமில்லை என்று தெரிவித்ததுமில்லை.

சகல மதங்களும் இறைவனை நோக்கியே வழிகாட்டி நின்ருலும், இறை மகன் கிறீஸ்து, பன்னூற்ருண்டுகளாக இறைவாக்கினர்களால் தெரிவிக்கப்பட்டு வந்தபடி மனிதனுகி, தானே மெசியாவென்பதை எண்பித்து, போதனைகளைச் சாதனையாகப் படைத்துக் காட்டி, மீட்பினைப் பெற்று தந்து தெய்வீகமான தன் வரலாற்றுல் கிறீஸ்தவத்திற்கு விசேட தகைமையை, அதற்கு ஒரு முழுமையைக் கொடுத்திருக்கிறார். (பெருஞ்சாலைகள் அரசுகளின் விசேட கவனம் பெறுவதில்லை? அதுபோல தான்) நேராக அவராலே பல அருட்கொடைகள் சாதனங்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. போதனைகளைத் தந்து வழியைக்காட்டியதோடு பணியை முடித்துக் கொண்டு விடாமல் அதை வாழ்ந்து காட்டி முன்மாதிரிகையையும் ஏற்படுத்தினுர். இதனுல் கத்தோலிக்க - கிறீஸ்தவம் சிறப்புடைத்தாகிறது இதனுல்,

வத்திக்கான் சங்கம் தனது பிற மறைகளின் ஒன்றிப்பு பற்றிய அறிக்கை, முதலாவது அத்தியாத்தில் வலியுறுத்திக் கூறுகிறது:- "......எல்லா வழிகளிலும் மீட்பைக் கொடுக்கவல்ல கிறீஸ்துவின் கத்தோலிக்க திருச்சபையொன்றின் மூலமேமனிதகுலம் மீட்பின் அனைத்துத் தகமைகளையும் முழுமையாகப் பெற்றுக் கொள்ள முடியும்."

எனவே, மனமாற்றம் மட்டுமல்ல, மத மாற்றம் கூடத் தேவையானதே என்கிறது திருச்சபை.

இவ்விரண்டுமே உண்மையான மீட்பின் தகைமைகளாகும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# செய்தி முரசு

## கிறிஸ்து சரித்திரபூர்வமானவர்

இயேசு என்னும் ஒருவர் உண்மையிலேயே வாழ்ந்தாரா என சிலர் பிரச்சினை எழுப்புகின்றனர். இயேசுக் கிறிஸ்து உண்மையிலே இவ்வுலகில் வாழ்ந்து இறந்தார் என்பதற்கு சாட்சிகளாக அக்காலச் சரித்திரம் சான்று பகருகிறது. இதனை விஞ்ஞான பூர்வமாகவும் விளக்கமுடியும் என்று திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் கூறினர்.

## 3ம் உலக நாடுகளில் திருச்சபை வரலாறு

'மூன்றும் உலக நாடுகளின் திருச்சபை வரலாறு' ஒன்றை எழுத பிற சமயத்தினரோடு உரையாடுவதற்கான அமைப்பைச் சேர்ந்த இறையியல் வல்லுநர்கள் தீர்மானித்துள்ளனர். இதன் கண்காணிப்பாளராக தந்தை தியோடோனியோ டி சூசா அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

## மாஸ்கோவுக்குத் திருத்தந்தை ?

ரஷ்யாவில் கிறிஸ்தவம் தோன்றிய 1000-ம் ஆண்டு நினைவு நாள் 1988ல் கொண்டாடுவதற்கு திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பரை அழைக்கலாமா என் இன்னும் முடிவு செய்யவில்லை என ரஷ்ய மரபுத் திருச்சபை அறிவித்துள்ளது. சோவியத் அரசு திருத்தந்தையை அழைக்க ரஷ்ய மரபுத் திருச்சபைக்கு அனுமதி தந்திருப்பதாகத் தெரிகிறது.

## உண்மையான விசுவாசிகள்

பர்மா அரசு வேத போதகப் பணியாற்றிய வெளிநாட்டுக் குருக்களை நாட்டைவிட்டு வெளியேற்றி முப்பது ஆண்டுகளுக்கு மேல் கடந்துவிட்டது. கத்தோலிக்க ஆதிவாசி மக்களிடையே பணியாற்ற போதிய குருக்கள் இல்லை. குருக்கள் இல்லாவிடினும் ஆதிவாசி மக்கள் தங்கள் விசுவாசத்தை இழக்காமல் உறுதியோடு இருக்கிறார்கள். வாரம் ஒரு முறை ஒரு இல்லத்தில் அனைவரும் கூடி செப வழிபாட்டில் பங்கேற்கின்றனர். சில சமயம் பிரிந்த சகோதரர்களின் ஆலயத்தில் நடைபெறும் வழிபாட்டிலும் கலந்துகொள்கின்றனர்.

## மறைமாவட்ட மறைக்கல்வி நடுநிலையச் செய்திகள்

1. மறைமாவட்ட மறையாசிரியர்களின் கூட்டு முயற்சியாகவும், மறைக்கல்வி நடுநிலையத்தின் தூண்டுதலாகவும் இம்முறை தபக்காலத்தின் ஆரம்ப நாளான விபூதிப் புதன் அன்று புதிய சிலுவைப் பாதை நூல் ஒன்று வெளியிடப்பட்டது. ''அனுபவங்கள் வழியே ஆண்டவனின் பாடுகளில் இணைவோம் வாரீர்'' என்ற பெயரில் வெளிவந்த இந்நூல் இன்றைய இன்னல் நிறைந்த மனித அனுபவங்களை ஒன்றுகூட்டிச் சிந்திக்கவும், தியானிக்கவும், செபிக்கவும் மக்களைத் தூண்டி நிற்கிறது.

> மனிதன் எவ்வளவு தூரம் உன்னைபற்றிப் புகழ்ந்து பேசுகிறான் என்பதை அறிய எவ்வளவு தூரம் ஆவலாய் இருக்கிறாய்? ஆனால் ஆண்டவன் உன்னைப்பற்றி என்ன நினைக்கிறான் என்று நீ ஏன் சிந்தித்துப் பார்ப்பதில்லை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

2. மறைக்கல்வி நடுநிலையத் மறையாசிரியர்களை ஒன்று தின் புதிய திட்டத்தின் கூட்டி சந்தித்து உரையாடுதல், படி பங்குகள் தோறும் உள்ள கருத்தரங்குகள் நடத்துதல் போன்ற செயல்கள் நடைபெற்றுக்கொண்டு வருகிறன்றன. இதன்படி 7-2-87ல் கல்முனையிலும் 14 - 3 - 87 செங்கலடியிலும், 25-4-87ல் மட்டு நகரிலும் மறையாசிரியர்களின் கூட்டம் நடைபெற்றது. குறிப்பிட்ட ஒரு குழுவினர் இப்பயிற்சியை நடாத்துகின்றனர். பங்குகளில் பணிபுரியும் முழுநேர பகுதிநேர தொண்டர் மறையாசிரியர்களும், குழுவாழ்வுச் சகோதரிகளும் கலந்துகொள்கின்றனர்.

## கொடுங்கோல் மன்னன் வாழும் நாட்டிலும் கொடும்புலி வாழும் காடு நன்றே

சீனாவில் வாழ்ந்த மகான் 'கன்பூஷியஸ்' ஒரு நாள் தனது சீடன் ஒருவனுடன் மலைச்சாரல் வழியே போய்க்கொண்டிருந்தார். சுற்றிலும் காடு அடர்ந்து வளர்ந்திருந்தது. வெகுதூரம் சென்ற பின் திடீரென்று ஒரு பெண்ணின் ஓப்பாரியும் புலம்பலும் கேட்டது. போய் என்னவென்று பார்த்துவரச் சொல்லி தனது சீடனுக்கு உத்தரவிட்டார் கன்பூஷியஸ்

சீடன் சென்று பார்த்தான். ''அம்மா! ஏன் அழுதுகொண்டிருக்கிறாய் என்ன துன்பம் நேர்ந்தது?'' என்று பரிவுடன் கேட்டான்.

அதற்கு அந்தப் பெண் விம்மலுடன் கூறியதாவது: ''ஐயா! என்னுடைய துன்பத்தை என்னவென்று சொல்வது? இந்த மலையிலே கொடிய புலிகள் வசிக்கின்றன. சில நாட்களுக்கு முன் எனது மாமனாரைப் புலி கொன்றுவிட்டது. பின்னர் இன்னும் சில நாட்கள் கழித்து எனது கணவரையும் கொன்றுவிட்டது. இப்பொழுது மூன்று தினங்களுக்கு முன்னால் அந்தப் புலி எனது ஒரே மகனையும் கொன்றுவிட்டது.. .!'' என்று சொல்லிவிட்டுப் புலம்பினாள்.

உடனே அந்தச் சீடன் ''சரி! அப்படியானால் ஏன் இந்தக் காட்டில் வசிக்கிறீர்கள்?'' என்றான்.

அதற்கு அவள் சொன்னாள்? ''ஐயா! வேறென்ன செய்வது? அரசாங்கத்தில் நடக்கும் கொடுங்கோன்மை இங்கு இல்லையல்லவா? ஆகையால் இங்கு நடப்பது அப்படி ஒன்றும் மோசமாகிவிடாது. என்ற நம்பிக்கை தான்.

சீடன் வந்து நடந்ததைக் கூறினான். உடனே கான்பூஷியஸ் ''கொடுங்கோல் நாட்டைவிடக் கொடும் புலி வாழும் காடு நல்லதென்பதைத் தெரிந்து கொள்'' என்றாராம்

நன்றி :- 'ஓரியன்ற் டைஜஸ்ட்'

தொகுப்பு :

**மாஸ்டர் றூபஸ்.**

சொறிக்கல்முனை, சம்மாந்துறை.

3. மட்டுநகர் கத்தோலிக்க ஆசிரியர் ஒன்றியத்தின் உதவியுடன் மறைக்கல்வி நடுநிலையம் இவ்வாண்டு கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர் வகுப்புகளுக்கான பிரத்தியேக கத்தோலிக்க சமய வகுப்புகள் மே மாதம் முதல் நிலையத்தில் நடைபெறவிருக்கின்றது,

4. 28-3-87ல் பொத்துவில் ஆலயத்திலும் 29-3-87ல் அக்கரைப்பற்று ஆலயத்திலும் பங்குத் தந்தையர், போதகர் முன்னேற்பாட்டின்படி நடு நிலைய உறுப்பினர்கள் பொது நிலையினருக்கான பயிற்சி வகுப்புகளை நடாத்தினார்கள். இவ் வகுப்புகள் 6 - 4 - 87 முதல் 9 - 4 - 87 வரை மாங்கேணி கிராமத்திலும் நடத்தப்பட்டது.

5. 20-4-87 முதல் 22-4-87 வரை கல்முனை பங்கைச் சேர்ந்த இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ ஒற்றுமையை நிலை நாட்ட 13 இளம் பெண்களுக்கான கருத்தரங்கு மன்ரேசாவில் நடைபெற்றது. ஆயர் பங்குத்தந்தை ஏற்பாட்டின்படி அருட்செல்வி கிறிஸ்த பெல் வழி நடத்த நடுநிலைய உறுப்பினர்கள் திட்டமிட்டு செயல்படுத்தினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இன்றும் நிகழட்டும் உயிர்ப்புக்கள்

(கடந்த இதழ் தொடர்ச்சி)

## இறப்பும் உயிர்ப்பும் இருவேறு நிகழ்ச்சிகளல்ல:



உலக மாந்தரின் வாழ்வுக்காக தன்னையே தருவதன் வழி சிலுவையில் இயேசு இறைத் தந்தைக்கே தன்னை முழுமையாக ஆக்குகிறார். இயேசுவின் இந்த முழுமையான தன்னர்ப்பணத்தை இறைத்தந்தை ஏற்றுக் கொள்வதன் இன்னொரு பெயர்தான் உயிர்ப்பு. மனிதக் கண்ணோக்கில் சிலுவையில் நிகழ்ந்தது இயேசுவின் இறப்பு: ஆனால் கடவுளது கண்ணோக்கில் அதுவே இயேசுவின் உயிர்ப்பு. ஏனெனில் இவ்வுலகிற்கு இறந்த இயேசு இறைவனில் முழுமையாக உயிர் வாழ்கிறார். ஆம், தன்னையே பிறருக்காக ஈதலில் மனித வாழ்வு தனது நிறைவை முழுவளர்ச்சியை அடைகிறது. இவ்வாறு எல்லாரும் வாழ்வுபெற தன்னையே தந்தையின் கையில் தந்த இயேசுவின் இறப்பு உண்மையில் அவரது அழிவு அன்று: மாறாக அதுவே அவரது நிறைவாழ்வு. கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்து முளைத்தெழுவது அதன் அழிவு அன்று, அதன் உண்மை வளர்ச்சி. இவ்வாறு தனது சிறப்பு உயிர்ப்பின் வழி இயேசு தனது பழைய இவ்வுலக வாழ்வின் நிலைக்குத்திரும்பவில்லை. புனித சின்னப்பர் கூறுவது போல் அவர் தனது இறப்பு - உயிர்ப்பில் இறைவளர்ச்சி எய்தி உலகளவில் உயிர்தரும் ஆவியானார். (1 கொரி. 15:45)

இயேசு மூன்றும் நாள் உயிர்த்தெழுந்தார். என்கிறதே நமது விசுவாச அறிக்கை, புதிய ஏற்பாடும் இதைத்தானே கூறுகிறது. இந்நிலையில் இயேசுவின் இறப்பு உயிர்ப்பு என நாம் கூறுவது எவ்வாறு எனும் கேள்வி எழலாம்.

காலம் என்பது இவ்வுலக வாழ்வைச் சார்ந்தது. இறப்பிற்குப் பிறகு அது இல்லை, வரலாற்றில் வாழும் மனிதனுக்குக் காலம் உண்டு; ஆனால் அது நித்தியத்தில் வாழும் இறைவனுக்கு இல்லை. அவர் காலம் கடந்தவர்; முப்பொழுதும் அவருக்கு இப்பொழுது தான். உயிர்ப்பு என்பது தந்தையின் கையில் தன்னைத் தந்த இயேசுவை அவர் ஏற்றுக் கொள்வது தான் என்றால் அது இயேசுவின் இறப்பிலேயே நிகழ்ந்திருக்க வேண்டும். தன்னையே தந்த மகனை ஏற்க தந்தை மூன்று நாட்கள் காத்திருப்பதில்லை. தந்தை இறைவனில் தான் இருக்கிறார். அவரின் இந்த இழப்பு உயிரின் இழப்பு அன்று: அது உயிர்வாழ்தலின் உச்ச நிலை, ஊனக்கண் கொண்டு பார்ப்பவருக்கு இயேசுவின் இறப்பு ஓர் அழிவாகத் தோன்றலாம்: ஆனால் உண்மைக் கண்கொண்டு நோக்குபவர்க்கோ அது மனித வாழ்வின் நிறை நிலை. எட்ட இயலாத இறை இயல்பையே எய்தும் அளவுக்கு தனது அணை கடந்த அன்பாலும் தியாகத்தாலும் இயேசுவின் மனித இயல்பு இறப்பில் வளர்ந்தது. இதனால் தான் அருளப்பர் தனது நற்செய்தியில் இயேசுவின் இறப்பையும் உயிர்ப்பையும் இரு நிகழ்ச்சிகளாக அல்ல, ஒரே நிகழ்ச்சியின் இருஆழங்களாக - அர்த்தங்களாக இணைத்தே பேசுகிறார். 'இறைவனின் மௌனத்தில் இயேசு உயிர்த்தார்' என்று புனித அந்தியோக்கு இஞ்ஞாசியார் எடுத்துரைப்பது இந்த உண்மையைத்தான். 20ம் நூற்றாண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

டின் இணையற்ற விவிலிய அறிஞர் புல்ட்மானின் பின்வரும் கூற்றிலும் இதே கருத்து இடம் பெறுவதை நாம் காணலாம். "சிலுவையின் அர்த்தமே உயிர்ப்பு".

எனவே மூன்றாம் நாள் இயேசு உயிர்த்தார் என்பதன் பொருள் என்ன? மூன்று நாட்கள் உயிரற்று இருந்த இயேசுவின் உடல் மூன்றாம் நாள் மீண்டும் உயிர் பெற்றது என்பதன்று. மாறாக இயேசுவினது உயிர்ப்பின் உண்மையை மூன்றாம் நாள் சீடர்கள் உணர்ந்து கொண்டனர். இயேசுவின் வாழ்வின், அவரது இறப்பின் உண்மைப் பொருளை அவர்கள் புரிந்து கொள்ளத்துவக்கியது அந்த மூன்றாம் நாள் இறந்த இயேசு இறைத் தந்தையால் மகிமைப் படுத்தப்பட்டுள்ளார், இன்றும் அவர் வாழ்கிறார் எனும் உண்மையை சீடர்கள் உணர்ந்து உள்ளூர அனுபவித்தது தான் மூன்றாம் நாள் நிகழ்ந்த உயிர்ப்பு.

ஆம், மூன்றாம் நாள் உயிர்த்தது இயேசு அன்று. அவர் இறந்த போதே உயிர்த்துவிட்டார். தந்தையுடன் முழுமையாக ஒன்றி விட்டார் மாறாக மூன்றாம் நாள் உயிர்த்தது இயேசுவின் சீடர்களது விசுவாசம். ஆம், செத்துக்கிடந்த அவர்களது நம்பிக்கைகள் உயிர்த்தன; சிலுவையைச் சந்தித்து சோர்ந்து விட்ட அவர்களது வாழ்வில் இயேசு தந்த அர்த்தங்கள் துளிர்த்தன. கல்வாரியில் கருகிவிட்ட அவர்களது இறையரசுக் கனவுகள் மீண்டும் பூத்துக் குலுங்கின. இருண்டு கிடந்த அவர்களது இதயங்கள் ஒளி பெற்றன; இறுக மூடிக் கிடந்த அவர்களது உள்ளங்கள் மீண்டும் விழிதிறந்தன. இறந்த இயேசு இறை தந்தையுடன் ஒன்றித்தவராக, அவரது ஆற்றலையும் ஆட்சியையும் பெற்றவராகத் தங்களுடன் தொடர்ந்து வாழுகிறார்; அவரது பணியைத் தொடரத் தங்களை அழைக்கின்றார். உலக முடிவுவரை தங்களுடன் இருந்து உயிருக்கெல்லாம் நற்செய்தி சொல்ல தங்களை அனுப்புகிறார் என்னும் உண்மையை சீடர்கள் ஆழ அறிந்துணர்ந்து அனுபவிக்கத் துவங்கியது இந்த மூன்றாம் நாளிலிருந்து, இந்த உண்மை அனுபவத்தையே காலியான கல்லறை, நாற்பது நாட்களாக நடந்த இயேசுவின் காட்சிகள் எனும் அடையாள மொழி வழியாக புதிய ஏற்பாடு சொல்ல முனைகிறது.

# இன்று தொடரட்டும் உயிர்ப்புக்கள்

உயிர்ப்புக்கு முன்பு இவ்வுலகில் வாழ்ந்த இயேசுவை எல்லாரும் காண முடிந்தது. உயிர்தரும் அவரது நற்செய்தியை அனைவரும் கேட்க முடிந்தது. ஆனால் உயிர்த்த இயேசுவைக் கண்டவர்கள் ஒரு சிலரே அவர்களை 'ஐநூறுக்கு மேற்பட்ட சகோதரர்' எனக் கணக்கிடுகிறார் புனித சின்னப்பர். (காண் 1 கொரி 15/5-8) இவ்வாறு உயிர்த்த இயேசுவின் உடனிருப்பை உடனடியாக உணர்ந்தவர்கள் விசுவசித்த சில சீடர்களே! அவர்கள் 'சிலுவையில் இறந்த இயேசு அழிந்து ஒழிந்துவிடவில்லை. அவர் வாழ்கிறார், அந்த வாழ்வு கடவுளுக்காக வாழும் வாழ்வு' (உரோ 6/10) எனும் நேரடி அனுபவத்தைப் பெறுகின்றனர். அவர்கள்தாம் தாங்கள் பெற்ற உயிர்ப்பு அனுபவத்திற்கு சான்று பகரவும் அனுப்பப் பெறுகின்றனர்.

இவர்கள் பெற்ற அனுபவம் உண்மையானதுதான். உண்மையிலேயே இயேசு உயிர்த்துள்ளார் என உலகம் ஏற்க உறுதியான சான்று யாது? இயேசுவின் உயிர்ப்பிற்கு உண்மையான உறுதியான சான்று சீடர்களின் உயிர்ப்பு வாழ்வு. ஆம், அஞ்சி அஞ்சி அறை ஒன்றிற்குள் அடைபட்டுக் கிடந்தவர்கள் உலகெங்கும் சென்று, அரசுகளுக்கும் அவற்றின் அடக்கு முறைகளுக்கும் அஞ்சாது எல்லா மக்களுக்கும் இயேசுவின் நற்செய்தியை எடுத்துச் சொல்லுகிறார்களே! சீடர்களின் இந்த உயிர்பிதான் இயேசுவின் உயிர்ப்பிற்கு ஒப்பற்ற சான்று. தங்களுக்குள் யார் பெரியவன் என சண்டையிட்டுக் கொண்டவர்கள் உண்மையான சகோதரத்துவ சமூகமாக எல்லாவற்றையும் பகிர்ந்து வாழத் துவங்குகிறார்களே! இதுதான் இயேசுவின் உயிர்ப்பை உலகறியவைக்க அவர்கள் தந்த உண்மையான விளக்கம்.

ஆம், இயேசுவின் உயிர்ப்பு என்பது புதிய மனித வாழ்வின் பிறப்பு அன்பு நீதி, சுதந்திரம் இவற்றை அடித்தளமாகக் கொண்ட இறையரசு சமூகத்தின் படைப்பு உலக மக்களெல்லாம் என்று சம உரிமை பெற்று சகோதரத்துவ உறவு கொண்டு முழுமையான விடுதலை வாழ்வு வாழுகின்றார்களோ அன்றுவரை இயேசுவின் உயிர்ப்பு முடிவதில்லை. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்த்தப்பட்ட இயேசுவின் உயிர்ப்புக்கு மட்டுமன்று, இன்றும் நிகழ வேண்டிய இயேசுவின் உயிர்ப்புக்கும் சாட்சிகளே கிறித்தவர்கள்.

சுவாமி D. அல்போன்ஸ்
திருச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## கவி ஆரம்

# குமரியின் குமுறல்

— மதிமகன் எஸ். எம். ஜாபீர் —

நாங்கள் புறப்படுகிறோம்
யுத்தத்தின் -
ரத்த நெடியில்
எங்களின்
புத்திகளும்
பேதலிதது விட்டன...

❋

இன்னும் இங்கே
இருப்பிடம் அமைத்தால்
எங்கள் -
உள்ளங்களிலும்
இராணுவ ரத்தங்கள்
இல்லை இல்லை...
குற்றங்கள் -
குழவிகளாகிவிடும்!

❋

''பூஸா''வைப்
புருஷர்களின்
புகலிடமாக்கிவிட்டு
உங்களின்
ஆசைகளுக்கு
இ...ல் ..லை...
வெறிகளுக்கு
எங்களையா
அணுகவேண்டும்?

❋

நாங்கள் புறப்படுகிறோம்
நடைப்பிணமாக...
ஆனால் -
நாளை வருவோம்
நடைப்பிணமாக அல்ல
விடியல்களுக்கு
கொடிகட்டும்
குமரிகளாக...!

❋

நாங்கள் புறப்படுகிறோம்
புரட்சிகளுக்கு - இன்று
பிணஆடை அணிவித்துவிட்டு...
ஆனால் -
மீண்டும் வருவோம்
புரட்சிகளுக்கு
பொன்னுடை போர்த்தும்
பெண்களாக... பண்களாக...!

❋

கன்னிகளே -
என்னுடன் வாருங்கள்
அப்போதுதான்
நாளை -
அமைதிகளுக்கு
அடிக்கல் நாட்டவரலாம்...
நான் சொல்கிறேன்
இன்னும் ஏன் -
தாமதங்களுக்கு
தலைவணங்குகிறீர்கள்?

❋

குண்டுகள்தான்
எம்மைக் -
குமுறவைக்கின்றன...
இன்றுபோவோம் -
நாளைவருவோம்...
நடைப்பிணமாக அல்ல...
விடியல்களுக்கு
வெற்றிவிழா எடுக்கும்
பொடிகளாக...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தான் தோன்றி இறைவா! நீயே தயவிலார் செயலைப் பார்த்தாய்

(மட்டக்களப்பு வரலாற்றில் மாறாத வடுவாய்ப் பதிந்த கொக்கட்டிச்சோலைப் படுகொலைகள் அனைவரது நெஞ்சத்திலும் அனலை வாரியிறைத்தது. அந்த அக்கினியில் ஒரு கவிதை நெஞ்சம் பற்றி எரிகிறது.)

தான்தோன்றி-இறைவா!- உன்முன்
தயவிலா-நெஞ்சர்- வந்து
கூன்மதி- தன்னைக்- காட்டிக்
குரூரமாய்க்-கொலைகள்-செய்து
வான்கதிர்- தோற்றம்- போன்ற
வாய்மையை-மறைக்க-எண்ணி
ஏன்?படு- பொய்கள்- சொல்லி
ஏய்க்கவே- நினைத்தார்- உன்னை

ஆயுதப் படையோர் வந்து
அப்பாவி மாந்தர் தம்மை
நாயினும் கீழாய் எண்ணி
நடுங்கிடச் சுட்டு வீழ்த்தி
தீயிலே குவித்துத் தீய்த்தார்
தீயிலும் தீய தீயார்
நீயிவர் செயலுக் கேற்ற
நீதியைச் செய்வாய் இங்கே

வாவியில் சென்றோர் மாண்டார்
வயலில் நின்றோர் மாண்டார்
கோவிலில்தொழுதோர் மாண்டார்
குழந்தைகள்துடித்துமாண்டார்
பூவினைச் சூடிக் கொண்ட
பூவையர் அலறி மாண்டார்
பாவிகள் வெடிகள் தன்னால்
பதறியே மாண்டார் கண்டாய்

இருல்வளர் பண்ணை தன்னை
இலாபமாய் நடத்தி இங்கு
சிறப்புற உழைத்தார் தம்மைச்
சினத்துடன் தாக்கி அன்னார்
இறந்திட வதைத்தார் செய்கை
இப்புவி இதயம் தன்னில்
இறந்திடா திருந்து வாழும்
இறைவனே அறிவாய் நீயே

எல்லோர்க்கும் இறைவா! உந்தன்
இல்லத்தில் பூசை இன்றி
புல்லர்கள் புரிந்த செய்கை
பூண்டொடு தம்மைத் தாமே
இல்லாமல் செய்ய அன்னார்
இயற்றிய செய்கை அன்றோ
கல்லினில் உன்னைக் காணார்
கருத்தினில் குருடர் ஆனார்.

வீதியில் செல்ல ஒண்ணா
விளைவயல் அறுக்க ஒண்ணா
போதிய உணவுக் கான
பொருளினை வாங்க ஒண்ணா
ஊதியம் தருவ தான
உழைப்பினைச் செய்ய ஒண்ணா
ஆதியே இறைவா! இந்த
அநீதிகள் இருக்க லாமோ?

பொற்கதிர் தன்னைத் தாங்கிப்
பூமியை வணங்கி நிற்கும்
நெற்பயிர் தன்னைச் சென்று
நெருங்கியே அறுக்க அஞ்சி
நிற்கிற உழவர் தங்கள்
நிலையினைப் பார்த்து நீதான்
கற்சிலை நிலையை விட்டுக்
கவலையைத் தீர்க்க வருவாய்.

கொக்கட்டிச் சோலை தன்னில்
குடிகொண்ட இறைவா! உந்தன்
திக்கெட்டும் பார்க்க வல்ல
திருமுகம் காட்டி உங்கள்
மக்கட்கு இன்னல் செய்தார்
மண்ணொடு மண்ணாய்ப் போக
இக்கணம் செய்வாய் நெற்றி
எரிதணல் விழியால் நீயே.

★ தான்தோன்றியாரடியான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சர்வதேச கத்தோலிக்க பத்திரிகை அமையத்தின் 14வது மகாநாட்டு அனுபவங்கள் (தொடர் - 5)

# <14th Congress of UCIP>

*1986, ஒக்ரோபர் 22 ஆம் நாள் மாலை இறுதி மகாநாட்டு நிகழ்ச்சியாக பிராந்திய முதலாவது கூட்டத் தொடர் மாலை 5-00 மணிக்கு பிற்பாடு ஆரம்பித்தது.*

*துணைக்கண்டங்களாக, பிராந்திய ரீதியாக நாடுகள் வகுக்கப்பட்டதன்படி ஆசியாக் கண்ட நாடுகள் 3 பிராந்தியங்களாக வகுக்கப்பட்டிருந்தன. கிழக்காசிய நாடுகள், தெற்காசிய நாடுகள், தென்கிழக்காசிய நாடுகள் என்பனவையாகும். இலங்கை, இந்தியா பாகிஸ்தான், பங்களதேஷ் ஆகியன தெற்காசிய* (South Asian) *பிராந்திய அணியில் அடங்கியிருந்தன. இது தெற்காசிய கத்தோலிக்க பத்திரிகை அமையம்* (South Asian Catholic Press Association— SACPA) *என அழைக்கப்பட்டது.*

*இப்பிராந்தியக் கூட்டத்தொடர் முக்கியமாக இரு நிகழ்வுகளைக் கொண்டிருந்தது. 1986 - 89 காலப் பகுதிக்கான உத்தியோகஸ்தர் தெரிவு முதலில் இடம் பெற்றது.* 'SACPA *தலைவராக இந்தியாவைச் சேர்ந்த அருட்திரு வர்க்கீஸ் போல் யே.ச. 3ம் கட்ட வாக்கெடுப்பின்போது தெரிவு செய்யப்பட்டார். செயலாளர் தெரிவில் இலங்கையைச் சேர்ந்த (யாழ் மறைமாவட்டம்) அருட்திரு. அன்ரன் மத்தாயஸ் முதற்கட்ட வாக்கெடுப்பிலேயே தெரிவானார். பொருளாளராக பாகிஸ்தானைச் சேர்ந்த அருட்திரு. வேர்ணுட் தெரிவு செய்யப்பட்டார்.*

*அடுத்து தெற்காசிய நாடுகளின் இன்றைய சூழல் ஆராயப்பட்டது - கலந்துரையாடப்பட்டது. அதேவேளை தெற்காசிய நாடுகளில் மேற்கொண்ட, மேற்கொள்ளத்தக்க நடவடிக்கைகளும் நிரலிடப்பட்டன. இந்த வேளையில் இலங்கையின் தற்போதையச் சூழல் மிகத் தெளிவாக இலங்கைப் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்டன. குறிப்பாக மனித உரிமை புறக்கணிப்பு பற்றி வெகுவாகச் சுட்டிக் காட்டப்பட்டது. பொது ஒன்று கூடலின் போது சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் இவை இடம் பிடித்திருந்தன.*

'SACPA'*வின் பிராந்தியக் கூட்டத் தொடரை விரைவில் கூட்டுவதற்கான ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டன.*

*இவ்வாறு அனைத்து உலக நாடுகளின், பிராந்தியக் கூட்டத்தொடர்களும் முடிவடைந்ததும் 2 ம் நாள் நிகழ்வுகள் நிறைவு பெற்றன.*

*ஒக்ரோபர் 23 ஆம் நாள் வியாழக்கிழமை காலை 3 ஆம் நாள் நிகழ்ச்சிகள் காலை 9.30 மணிக்கு ஆரம்பமானது. ஆபிரிக்க, தென் அமெரிக்க நாடுகளின் ஆய்வுரைகள் முக்கிய இடம் பிடித்திருந்தன.*

*ஆபிரிக்காவின், தொடர்பு - கலாச்சாரம் - சமயம்* (Communication - Culture - Religion in the African Context) *பற்றி, பேராசிரியர் இவ்போ யூலின் பெனோயுகூ* (Prof. Efoe Julien Penoukou - Abidjan) *ஆய்வுரை வழங்கினார். ஜேர்மன் மொழியில் அவர் தன்னுடைய ஆய்வுரையைச் சமர்ப்பித்தார். அடிமைச்சூழல் நசுக்கல், வறுமை பழமையான வாழ்க்கைச்*

---

கர்ப்பிணி: ஏன் டாக்டர் பிள்ளை இலேசில பிறக்குதில்ல?

டாக்டர்: நாட்டில நடக்கிற அநியாயத்தைப் பார்த்து வெளியில வாறத்திற்கு பயப்பிடுகுது போல.

— ஓ. கே. குணநாதன்

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சூழல் பற்றி ஆபிரிக்காவின் நிலைமையை நன்கு விளக்கினார்.

இலத்தீன் அமெரிக்காவின் தொடர்பு - கலாச்சாரம் - சமயம் (Communication - Culture - Religion in the Latin American Context) பற்றி. P. றினற்றோ செவியா யே. ச. (satiago de chile) ஆய்வுரை வழங்கினார். மனித அடிமைத்தனம், கிறிஸ்தவர்களின் புறக்கணிப்புச் சூழல் முக்கிய எண்ணக் கருக்களாக அமைந்திருந்தது - குறிப்பிடத் தக்கது.

முற்பகல் தேநீர் இடைவேளைக்குப் பின் 11-00 மணிக்கு குழு நிலைக் கலந்துரையாடல்கள் இடம் பெற்றன. குழுக்கள் மொழி வாரியாகப் பிரிக்கப்பட்டிருந்தன. குழுக்கலந்துரையாடல்களில், நாடுகளில் இன வாரியான பிரச்சினைகள், இளைஞர் எழுச்சிகள் - புரட்சிகள் முக்கியத்துவம் பெற்றிருந்தன.

மதிய உணவுக்குப் பின் பிற்பகல் 3 - 00 மணிக்கு பிற்பகல் நிகழ்ச்சிகளும் குழுநிலையான கருத்துப் பரிமாறல்களாகவே அமைந்திருந்தன.

"திருச்சபை பத்திரிகைத்துறையும் வேறுபட்ட அனுபவங்களும்" (Church Press, Differant Experiences) "ஏனைய சமயங்களையும் - கலாச்சாரங்களையும் பின்பற்றும் மக்களுக்கு எழுதுதல்" (Writing for People of other Religions and Culture) பற்றிய தான கலந்துரையாடல்கள் இடம் பெற்றன. இச் சந்தர்ப்பத்தில் பல நாடுகளில் பத்திரிகை சுதந்திரம் மறுக்கப்படுவது பற்றி வெகுவாக கருத்துப் பரிமாறப்பட்டது.

பிற்பகல் 5-00 மணிக்கு பிராந்தியக் கூட்டத் தொடர் மீண்டும் ஆரம்பமானது. எதிர்கால எண்ணக் கருக்களையும், நிகழ்வுகளையும் வரையறுக்க இவை கூட்டப்பட்டன.

"SACPA" வும் - தத்தமது சூழ் நிலைகளில் முன்வைக்கக் கூடிய தீர்மானங்களை நிறைவேற்றியது. பொது நலன் கருதிய பத்திரிகைப் பணி விரிவடைவதற்கான ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டன, இத்துடன் 3 ஆம் நாள் நிகழ்வுகள் நிறைவு பெற்றன.

ஒக்ரோபர் 24 ஆம் நாள், வெள்ளிக் கிழமை காலை 9-30 மணிக்கு மகாநாடு ஆரம்பமானபோது மகாநாட்டு மண்டபம் புதுப் பொலிவு பெற்றிருந்தது. அனைத்து ஆசனங்களும் நிரம்பியிருந்தன. 1 ஆம் நாள் மண்டபம் நிரம்பியிருந்தது போல் 4 ஆம் நாளும் செழிப்புச் சூழ்நிலை நிலவியது.

"UCIP" க்குரிய 1986 - 89 க்கான தலைவர் தெரிவு இடம் பெற இருந்ததே இதற்கு முக்கிய காரணமாகும்.

## கலையுலகன் எஸ். லோகநாதன்

4 ஆம் நாள் மகாநாட்டு நிகழ்வுகளின் முதற்கட்ட நிகழ்ச்சியாக, பொதுச் செயலாளர் அருட்திரு. ஞூருேரே கொல்ட்ஸ், அவர்களினுல் கடந்த கால 1983 - 86 க்கான "UCIP" யின் அறிக்கை சமர்பிக்கப்பட்டது. அறிக்கையில் தலைவர் தெரிவுக்கான அறிவித்தலையும் - அழைப்பையும் விடுத்தார்.

தலைவர் பதவிக்கு, மூவரின் பெயர்கள் முன் மொழியப்பட்டு, வழிமொழியப்பட்டிருந்தன, மூவருக்குமிடையிலான இரகசிய வாக்கெடுப்புக்கு "UCIP" யின் பிராந்திய நிர்வாக உறுப்பினர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

ஒவ்வொரு பிராந்தியங்களிலிருந்தும் "UCIP" க்கான நிர்வாக உறுப்பினர்கள் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டிருந்தனர்.


வாக்கெடுப்பு முடிவு தேநீர் இடைவேளைக்குப்பின் அறிவிக்கப்படும் என பொதுச் செயலாளரின் அறிவித்தலைத் தொடர்ந்து அனைத்துப் பிரதிநிதிகளும் தேநீருக்காக விரைந்தார்கள்...... (தொடருவோம்)

நேற்று என்பது கண்ட கனவு. நாளை என்பது கற்பனை உலகம். இன்று என்பதே உன்வாழ்வுக்கு வழிவகுப்பது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மணம் வீசும் மரியாள்



வைகாசித்திங்கள் மாதாவின் வணக்க மாதமென கத்தோலிக்க திருச்சபை ஆண்டு தோறும் அனுசரித்து வருகிறது. இம்மாதத்தில் சிறப்பாக செபமாலை — பிரார்த்தனை — நவநாட்கள் மாதாவின் மகிமையை வெளிப்படுத்தும் வண்ணம் நடைபெறுகின்றன.

இவ்வாண்டு ஆனித்திங்கள் 7ம் நாள் முதல் எதிர்வரும் 1988ம் ஆண்டு ஆவணித் திங்கள் 15ம் நாள் வரை 'மரியாளின் ஆண்டாக திருத்தந்தை அறிவித்துள்ளார் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. இது வரலாற்றில் இரண்டாவது மரியாளின் ஆண்டாகும்.

இவ்வாறு மரியாளுக்கு உலகம் முழுவதும் பெருவிழா எடுக்கக் காரணம் என்ன? இந்தச் சிறப்புக்கும் பெருமைக்கும் அவள் தகுதியானவளா? ஊரறியாது, உலகமறியாது எங்கோ ஒரு மூலையில், குக் கிராமத்தில் வாழ்ந்த ஒரு பெண்ணுக்கு இத்தகைய பேறு எப்படி ஏற்பட்டது? அவள் என்ன பெண் தெய்வமா? என்றெல்லாம் கேள்விகள் எழலாம்; எழுந்ததுமுண்டு. திருச்சபை போதிக்கும் அவளது கன்னிமை, மாசில்லாத்தன்மை, குடும்ப வாழ்வு, விண்ணேற்பு என்பவைகள் கடுமையாக அலசப்பட்டு விமர்சிக்கப்பட்டுள்ளன.

## மரியாளின் தாய்மை

மரியாளைப் பற்றிய நற்செய்திக் கூற்றுக்கள் கிறீஸ்துவின் பிற்கால வாழ்வுக்கு ஒரு பொருத்தமான முன்னுரையே அன்றி அது வரலாற்று நிகழ்ச்சி அல்ல என்று வாதிடுவோர் உண்டு.

ஆய்வுகளையும் - அலசல்களையும் ஒருபுறம் வைத்துவிட்டு ஆழச் சிந்தித்தால் நம் நெஞ்சில் படுவதெல்லாம் ஒன்று தான். அவள் கிறிஸ்து எனும் மாபெரும் மனிதனின், வரலாற்று நாயகனின், இறைமகனின் தாய். அவரைப் பெற்று, பாலூட்டி, சீராட்டி, பாராட்டி வளர்த்த அன்னை. இந்த உலகில் கிறிஸ்து எனும் ஒரு மனிதனை உலவவிட்டதில் மரியாள் என்னும் பெண்ணின் தாய்மை எனும் பண்பின் இடம் ஈடிணையற்றது. அந்த இடத்தை நிரப்பவல்லார் எவருமே இல்லை. கிறிஸ்துவின் உடலை, அவரது உயர்ந்த உள்ளத்தை, அவரிடம் விளங்கிய உயர்ந்த மதிப்பீடுகளை உருவாக்கியதில் கிறீஸ்து மனிதன் என்ற முறையில் அவளுக்கும் மாபெரும் பங்குண்டு. மரியாள் கிறிஸ்துவின் தாய் என்னும் ஒரே ஒரு காரணமே அவளைப் போற்றுவதற்கும், புகழ் பாடுவதற்கும் போதுமானது.

## இறைமகனின் தாய்

நற்செய்தி ஏடுகள் மரியாளைப் பற்றிப் பேசுவது மிகவும் குறைவுதான். ஆனால் அந்தச் சில பகுதிகளே அவளது முழுவாழ்வையும் உய்த்துணரப் போதுமானது.

மரியாள் மாசற்ற விதத்தில் பிறந்தாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

என்பது திருச்சபையின் விசுவாசமும் போதனையுமாகும். சாதாரண ஒரு பெண் மாசற்ற விதத்தில் வித்தியாசமாகப் பிறப்பது எப்படி என்பது ஒரு கேள்வி. இதற்கு நேரடியாகப் பதில் காண்பதைவிட கிறிஸ்துவின் பின்னணியில் பதில் காண்பதுதான் பொருத்தமானது என்று நம்புகிறோம்.

கிறிஸ்துவை இறைமகனாக — இறைவனாகத் திருச்சபை காண்கிறது. உலகை மீட்கப் பிறந்த இறைவனின் அன்பே கிறிஸ்து என்பது கிறீத்தவத் தத்துவம். இறைவன் குற்றமுள்ளவனாக — மாசுள்ளவனாக இருக்கமாட்டான். அது இறைவனைப் பற்றிய இலக்கணத்துக்கும் ஏற்புடையது அன்று. இத்தகைய குற்றமற்ற அன்புருவான பெருஞ் சக்தி, தான் பிறக்க இவ்வுலகில் ஒரு பெண்ணைத் தெரிந்துகொண்டதெனில் அது தற்செயலாக இருக்கமுடியுமா? அவள் சாதாரண பெண்ணாகத்தான் இருக்க முடியுமா? அவள் இறைவனின் திருவுளத்தில் என்றோ திட்டமிடப்பட்டவள். திருவருளால் நிறையப்பெற்றவள், தூய்மையானவள். ஆசீர்வதிக்கப்பட்டவள். மண்ணில் இறைவனைத் தாங்கிய கோயிலவள். இதனுற்றான் திருச்சபை, இறைவன் சிறப்பான வகையில் தம் திருவருளினால் குற்றமற்றவளாக பெண் குலத்தில் ஆசீர்வதிக்கப்பட்டவளாக உருவாக்கினார் என்று கொண்டாடுகிறது. மரியாளிடம் கிறிஸ்துவின் பிறப்பை அறிவிக்க வந்த தூதன் கூறியதும் இதுதானே! "அருள் நிறைந்தவளே! வாழ்க, ஆண்டவர் உம்முடனே!" ஆமாம், மரியாள் கிறிஸ்து பிறக்கு முன்பே அருள் பெற்றவள் ஆண்டவரோடு வாழ்பவள். அதுமட்டுமல்ல மரியாளின் உறவினளான எலிசபெத் மரியாளைக் கண்டபோது கூறிய இறைவாக்கு இன்னும் தெளிவானது. 'பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே" இந்தக் கூற்றுக்கள் அனைத்தையும் ஒன்றிணைத்துப் பார்க்கும்போது மரியாளின் தூய்மை, அவள் சிறப்பான விதத்தில் தெரிந்துகொள்ளப்பட்டமை, மாசின்றிப் பிறந்தமை புரிகிறதல்லவா?

---

ஒருவர் : ஏன் சார் பஸ்சில 'ஹெல் மொட்'டோட போறீங்க.
மற்றவர் : 'ஷெல்' விழுந்தாலும்...

— ஓ. கே. குணநாதன்

---

## புலவனின் பார்வை

இந்த உண்மைகளை ஆழமாக அறிந்து, அதை ஏற்று நம்பி அனுபவித்த வீரமாமுனிவர் தாம் வடித்த தேம்பாவணி என்னும் தீந்தமிழ் காப்பியத்தில் வானதூதன் மரியாளை வாழ்த்திய காட்சியை மெய்ப்பொருள் துலங்குமாறு பாடுகிறார்.

பொய் அகன்று எழுந்த தெய்வப்
பூரண ஓங்கையாளே!
ஐ அகன்று உவப்பில் நாதன்
அணிந்துவாழ் நெஞ்சத்தாளே!
வையகம் வைகும் வாய்ந்த
மாதருள் எண்ணில் ஆசி
துய் அகம் பொலியப் பூத்த
சுந்தரி வாழி என்றான்

இதன் பொருளைக் கூறுவோம்;

மெய்யானவற்றைக்கொண்டு உயர நிறைவான தெய்வ வரங்களால் நிரம்பப்பெற்ற பிரியமான செல்வியே! ஐயமின்றி இறைவனைச் சரணடைந்து வாழும் நெஞ்சுடையவளே! இந்நிலவுலகில் உயர்ந்த பெண்களுள் எண்ணில் அடங்காத பாக்கியங்களைப் பெற்று அப்பழுக்கில்லாத மனத்தில் உயர்ந்த அழகியே! வாழ்க! என்றான்.

இவ்வாறு மரியாளின் மாசற்ற தன்மையை அவள் சிறப்பான வரங்களால் நிரம்பப் பெற்றதை, உலகில் வாழும் உயர்ந்த பெண்களுள் எல்லாம் உயர்ந்தவள் என்பதை, இறைவனை முற்று முழுதாகச் சரணடைந்தவள் என்பதை வீரமாமுனிவர் செஞ்சொற் சித்திரம் தீட்டிக் காண்பித்துள்ளார்.

## சமூக நோக்கு

மரியாள் யூதகுலத்தவள். மரியாள் வாழ்ந்த காலத்தில் யூதகுலத்தில் பெண்கள் ஆணுக்குச் சமமானவர்களாக — பெருமைக்குரியவர்களாக — மதிப்புக்குரியவர்களாகக் கருதப்படவில்லை. ஆணின் அடிமையாக, போகைப் பொருளாக, வேலைக்காரியாகவே கருதப்பட்டாள். இவ்விருபதாம் நூற்றாண்டிலும் கூட பெண்களின் நிலை பரிதாபத்துக்குரியதாக இருக்கும்போது இரண்டாயிரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஆண்டுகளுக்கு முன் எப்படி இருந்திருக்கும் என்று எண்ணிப்பார்க்க முடிகிறதல்லவா?

இத்தகைய ஒரு சமூக அமைப்பில் வாழ்ந்த மரியாள் என்னும் பெண்ணை சூசை என்னும் ஆண்மகன் - கணவன் போற்றினன், புகழ்ந்தான், தொழுதான் என்றால் அவள் எத்துணை பெருமைக்குரியவளாக இருக்க வேண்டும்!

மரியாள் கருவானதை கணவன் சூசையால் புரிந்து கொள்ள முடியவில்லை. தான் அறியாமல் இது எப்படி நிகழும் என்னும் நியாயமான சந்தேகம் அவனை வாட்டி வதைக்கிறது. அவளை அடித்து, உதைத்து, பழித்து இகழும் அளவுக்கு சூசை இழிமகன் அல்ல. இவளைவிட்டு விலகிவிடலாமா என்ற ஓர் எண்ணம். இவ்வாறு மனஉளைச்சலில் துடிக்கும் சூசையிடம் இறை தூதன் தோன்றி மரியாள் இறை அருளால் ஆவியான கருவானள். ஆதலால் கலங்காதே! ஏற்றுக்கொள்! என்று கூறுகிறான். சூசையும் உண்மை நிலை அறிந்து மனம்மாறி மரியாளை ஏற்றுக் கொண்டார் நற்செய்தி தரும் விளக்கம் இவ்வளவே.

தன் மனைவி இறை அருளால் கருவானள். தெய்வீகக் குழந்தையை வயிற்றிலே தாங்குகிறாள். இத்தகைய பெரும்பேறு பெற்றவளை பழிநினைத்தேனே என்று சூசையின் உள்ளம் துடித்திருக்கும். அவளால் தனக்குக் கிடைத்துள்ள பெருமையை எண்ணி மனம் மகிழ்ந்திருக்கும். அந்தத் தெய்வத்தாயை நெஞ்சார வாழ்த்தியிருக்கும். இவைகளை நற்செய்தி ஏடுகளிலே நாம் காணவிட்டாலும் மாபெரும் புலவனை வீரமாமுனிவனின் கவியுள்ளம் உய்த்துணர்ந்து கண்டது. இந்த உணர்வுக் கோலங்களை எல்லாம் அழகு தமிழால் தீட்டி அன்னை மரியாளை அணி செய்தான்; அவள் பெருமையை எடுத்துரைத்தான்.

தாயும் நீ தலைவி நீ தாழ்வு இல்லாத்
தயவு எலாம்
ஈயும் நீ பரியும் நீ இட்டஎன்
குறைஎலாம்
சேயும் நீ கருணையாம் சேயொடு
அன்பு அலையினுள்
தோயும் நீ எனையும் நீ ஆள்எனத்
தொழுதுளான்.

இவ்வாறு மனைவியாகிய மரியாளை சூசை வாழ்த்தியதை, புகழ்ந்ததை, போற்றியதை, தொழுததை அழகுறக் கூறுகிறார் வீரமாமுனிவர். கற்பனைப் பாட்டாயினும் கருத்துள்ள பாட்டல்லவா?

சூசையின் இந்த போற்றுதல்களை எல்லாம் அன்றிருந்த சமூக அமைப்பின் பின்னணியில் பார்க்கும்போது மரியாள் எந்த அளவு உயரத்தில் உள்ளாள், அவளை மாசில்லாத்தாய் என்று கொண்டாடுவது எத்தனை பொருத்தமானது என்று தெரிகிறது.

## இவள்தான் மரியாள்

சுவாமி இராமகிருஷ்ணர்கூட தன் மனைவி சாரதாதேவி அம்மையாரை பராசக்தியாகக் கண்டு தொழுதார் - பூசை செய்தார். என்று படிக்கிறோம். இதற்கும் வீரமாமுனிவர் காட்டும் சூசையின் தொழுதலுக்கும் வேறுபாடு உண்டு. மரியாளுக்கு வந்த பெருமை எல்லாம் அவள் தெய்வம் என்பதாலோ, அவதாரம் என்பதாலோ அல்ல. அவள் வயிற்றில் தாங்கவிருந்த — தாங்கிய தெய்வீகக் குழந்தையால் தான் மரியாள் பெருமை பெற்றாள். இதைத் தான் வீரமாமுனிவர் 'கருணையாம் சேயொடு அன்பு அலையினுள் தோயும் நீ' என்று குறிப்பிடுகிறார். ஆகவே, மரியாளின் பெருமைக்கும், அவளின் மாசில்லாத் தன்மைக்கும் அடித்தளமாக நிற்பவர் கிறீஸ்து. கிறீஸ்து இன்றி மரியாள். இல்லை அந்தக் கிறீஸ்துவின் பின்னணியில் மரியாளைப் பார்க்கும்போது தான் அவள் அருள் நிறைந்தவள், பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவள், மாசில்லாது உருவானவள் உலகின் தாய் என்னும் வார்த்தைகளின் மெய்ப்பொருளை எம்மால் முழுமையாக உணர முடியும்.

மலர்வேந்தன்.

---

சமாதானத்திற்கு வேறு வழி ஏதும் கிடையாது.
சமாதானம்தான் ஒரே வழி
— மட்டூர் ராம்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# திருமறையைத் தெரிந்துகொள்வோம்

றெக்ஸ்

**கேள்வி:** மத்தேயு 4ம் அதிகாரத்தில் யேசுவை சோதிக்கப்படும்போது 2வது நிகழ்ச்சியாக அலகை யேசுவைக் கோவில் முகட்டில் நிறுத்தியதாகவும், அதே நிகழ்ச்சியை லூக்கா 4ம் அதிகாரத்தில் வாசிக்கும்போது 2வது சோதனையாக உலக அரசு முழுவதையும் காட்டி தன்னை வணங்கும்படி யேசுவைக் கேட்டதாகவும் வாசிக்கிறோம். இதில் எது சரியானது எது பிழையானது?

அல்போன்சா பிரான்சிஸ்
கொக்கட்டிச்சோலை.

**பதில்:** நற்செய்தி ஏடுகள் எழுத்துவடிவம் பெறுமுன்; வாய்வழி மரபுகளாகவும் நற்செய்தித் துணுக்குகளாகவும், பலஸ்தீனாவிலும் ஏனைய ஆதிக்கிறிஸ்தவ சமூகங்கள் இருந்த இடங்களில் வழக்கில் உலவின என்பதைப் புனித லூக்காவின் நற்செய்தியின் முதல் இரண்டு வசனங்களைப் பார்த்தாற் புரியும். இத்தகைய மரபுகளையும் துணுக்குகளையும் எடுத்து அலசித் தொகுத்து இன்னும் பலவற்றைச் சேர்த்தே நற்செய்தியாளர்களோ அன்றேல் அவர்களது குருகுலத்தினரோ, நற்செய்தி ஏடுகளை இறுதியாகத் தொகுத்தனர் என்பதையும் லூக்காவின் அடுத்த இரு வசனங்களிற் காணலாம்.

நற்செய்திகளுக்கெல்லாம் பின்னணியில் ஒரு நற்செய்தி உண்டெனவும் அதுவே மாற்குவின் நற்செய்தி என்பதும் விவிலிய விற்பன்னர்களின் ஏறக்குறைய ஏகோபித்த முடிவு. அந்த நற்செய்தியின் கட்டமைப்பை அடிப்படையாக வைத்து, இன்னும்பல தேவையான உசிதமான தரவுகளைச் சேர்த்து ஏனைய நற்செய்திகள் மூன்றும் எழுதப்பட்டுள்ளன.

சோதனை பற்றிய பகுதியில் மாற்கு, யேசு 40 நாளும் பாலைவனத்தில் சாத்தானால் சோதிக்கப்பட்டார் என்கிறார் — அதுவே உண்மையும் கூட. ஏனெனில் இறைமகன் யேசுவின் 40 நாள் பாலைவன வாசம், ஒரு வெறும் உபவாசமும் தியானமும் மட்டுமல்ல; அந்த 40 நாட்களும் அவர்தம் எதிர்கால வாழ்வின் பாதையை நிர்ணயிக்க சிந்தித்துச் செபித்து முடிவெடுக்க முனைந்த நாட்கள். தம்மை எந்த முறையில் அறிமுகப்படுத்தவேண்டுமென ஆராய்ந்து பார்த்த நாட்கள். அந்த நாற்பது நாட்களும், உண்மையான மீட்புப் பணி அல்லது இரட்சணியம் மக்கள் வயிற்றை நிரப்புவதா, வீரதீரவிந்தைகளிலா அல்லது அதிகாரத்திலா என்றெல்லாம் இறைமகன் யேசு அலசி யோசித்து முடிவெடுத்த நாட்கள்.

மத்தேயு/லூக்கா நற்செய்திகளிற் குறிப்பிடப்படும் அம்மூன்று விதமான சோதனைகள் எத்தகைய மெசியாவாக இறைமகன் யேசு (மீட்பரை விரைவாகவும் ஆவலோடும் எதிர்பார்த்திருந்த மக்களுக்கு) தன்னை அறிமுகப்படுத்தவேண்டுமெனத் தன் மனதில் நடத்தி முடித்த தீர்மானப் போராட்டங்கள்.

அப்பத்தினால் வளமுள்ள வாழ்வும் கீழே குதிப்பதனால் வீரதீரமும்; வளமுள்ள காட்சியினால் அரச அதிகாரமும் குறிக்கப்படுகின்றன. இம்மூன்று வழிகளினாலும் அவர் மக்களைத் தன்பக்கம் கவர்ந்திழுக்க முடியும். அதுவா இறைபணியைத் தொடக்கும் வழி?

மெசியா பற்றிய கற்பனைகள் மக்கள் மனதில் அக்காலத்திற் கட்டவிழ்ந்து பறந்து கொண்டிருந்தன. அரசியல் விடுதலையையும் சமூக சுபீட்சத்தையும் இன்றைக்கு நம்மைப் போலவே அன்று யூதர்களும் எதிர்பார்த்திருந்தனர். அதைத் தமக்குத் தரப்போகும் தலைவனைப் பற்றி மனக்கோட்டைகள் ஏராளமாகக் கட்டினர். அக்கற்பனைகளின் பிரதிபலிப்புத்தான் அம்மூன்று விதமான சோதனைகளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஆயினும் இறைமகன் அவற்றையெல்லாம் மேற்கொண்ட, ஜெயித்து ஆயிரமாயிரம் ஆண்டு களாக இறைவன் இறைவாக்கினர்கள் மூலமாக அறிமுகப்படுத்தியிருந்த ஒரேயொரு வழியைத் தெரிந்தெடுத்தார். அந்த வழி வீரத்தின் வழி யும் அல்ல. அதிகாரத்தின் வழியுமல்ல அது தியாகத்தின் வழி — துன்பத்தின் வழி — அன்பின் வழி — சேவையின் வழி.

இறைவாக்கினர் எரேமியா, இசையா, எசேக்கியேல் முதலியோர் கட்டியம் கூறிய துன்புறும் ஊழியனை மெசியா: தன் காயங் களால் மற்றவர்களைக் குணமாக்கும் மெசியா, தான் ஓடாகி மற்றவர்களை உய்யவைக்கும் மெசியா — இறைவன் காட்டிய இந்த வழியே இறைமகன் யேசு மீட்புப் பணிதனைச் செய்யத் தெரிந்தெடுத்துக்கொண்ட வழி.

முன்பு விளக்கியபடி வாய்வழி மரபுகளி னதும் குறிப்பிட்ட நோக்கங்கள் கருதியும் எழுதப்பட்ட நற்செய்திகளில் நீங்கள் கேட் டுள்ளபடி இப்படிப்பட்ட வித்தியாசங்களும் வேறுபாடுகளும் உண்டு. யூதர்களுக்காக எழு தப்பட்ட மத்தேயு நற்செய்தியில் ஒருவிதமான ஆரோகணம் (Climax); பழைய இஸ்ரேலை யும் அதன் பாலைவன அனுபவங்களையும் பிரதி பலிக்கும் விதமாக சோதனைகளை வரிசைப் படுத்தி புதிய இறையரசு இறைமகனால் உரு வாக்கப்படுகிறது என மத்தேயு எண்பிக்கிறார்.

யூதர்களல்லாத பிற இனக் கிறிஸ்தவர் களுக்காக எழுதப்பட்ட நற்செய்திகளில் சோதனைகளின் ஆரோகணம் (Climax) வேறு விதமானது.

ஜெருசலேமின் மாண்பைக் கூறிய பொழு தெல்லாம் வலியுறுத்தும் இந்த நற்செய்தியில் புதிய ஜெருசலேமின் தலைவர் — மெசியா, அங் கேயே தன் ஜெயத்தை/வெற்றியை நிலைநாட் டுவதாகச் சித்தரிக்கப்படுகிறது.

எனவே இத்தகைய வித்தியாசங்களையும் வேறுபாடுகளையும் மட்டும் வைத்துக்கொண்டு, நற்செய்திகளையோ அன்றேல் வேதாகமத் தையோ ஆராய முற்படும்போது, அவற்றின் தரத்தையும் உயர்வையும் பற்றி சங்கடமான அபிப்பிராயங்கள் எழத்தான் செய்யும். இவற்றையெல்லாம் தாண்டி அப்பால் சென்று இன்னும் ஆழமாக, அவை எழுதப்பட்டதன் நோக்கங்களை ஆராய்ந்தாலே நான் முன்பு விளக்கியபடி அவற்றின் உயர்வும் இறைமகன் யேசுவின் ஒப்புயர்வற்ற மாண்பும் துலக்கமாக ஒளிரும்.

இக்கேள்விக்கு நீங்கள் கேட்காதவற்றிற்கு மாகச் சேர்த்தும் பதிலளித்துவிட்டேன். வழக் கமாக யேசுவின் சோதனைகள் பற்றிப் பலருக் குப் பலவிதமான ஐயங்கள் எழுவதுண்டு எனவேதான் இந்நீண்ட பதில் போரடித்திருந் தால் பொறுத்துக்கொள்ளவும்.


நூல் அறிமுகம்

## "திருப்பயணி சொன்ன கதை"

எழுதியவர்: கருதிநெல் ஹியூம்
தமிழாக்கம்: கருணாகரர் அடிகள்.
விலை: ரூபா 2-50.

❋ உண்மையைத் தேடி அலைந்து அதை எதிர்பாராது கண்டு அனுபவித்தவனின் அழகிய கதை.

❋ நாம் அவனைத் தேட அவர் எம்மைத் தேடுகிறார் - அந்தத் தேடலில்தான் எத் தனை அன்பு! எத்தனை இரக்கம்!

தொடர்பு: இயக்குனர்,
சமூகத் தொடர்பு நிலையம்.
ஆயரகம் — மட்டக்களப்பு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# சொந்தம் எப்போதும் தொடர்கதைதான்

## செ. குணரத்தினம்

### அத்தியாயம் 16

"மேகத்தைத் தூது விட்டேன்
மழையாகப் பெய்யுதடி"
— செ. கு. —

மனிதன் எப்போதுமே ஒரே நிலையில் ஒரே குண இயல்புகளோடு இருப்பதில்லை. சூழ்நிலைகளும் அனுபவங்களும் அவனை அவனையுமறியாமலேயே மாற்றிவிடுகின்றன.

ஆனந்தனும் சில வருடங்களுக்கு முன்னுல் முட்டாள் தனமாக நடந்து கொண்டவன்தானே! ஆனுல் இப்போது அவன் புது மனிதனுக மாறிடவில்லையா! ஆனுல் சில கெட்டவர்கள் கெட்டவர்களாக காலமெல்லாம் வாழத்தான் செய்கிருர்கள். என்ருலும், எல்லோரும் அப்படியல்லவே. வீரகத்தியைப் போன்றவர்களும் நிறையப்பேர் வாழ்ந்து கொண்டுதானே இருக்கிருர்கள்.

"என்ன தம்பி ஆனந்தன் என்னைக் கைவிட மாட்டியே!" வீரகத்தி அழாக் குறையாகக் கேட்டான்.

ஆனந்தனுக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை முடிவுசொல்லமுடியாமல் தவித்தான்.

"தம்பி, ஊருக்குள்ள மானம் மரியாதையாக - கௌரவத்தோட வாழ்ந்தநான் தொடர்ந்தும் அப்படியே வாழ வேண்டும் என்ற ஒருவித போலி ஆசையால என்னுடைய தென்னந்தோட்டத்தை நம்பி என் வீடு வளவையெல்லாம் அடவுவைத்து வாழ்க்கையைக் கொண்டுபோனன். திடீரென்று வந்த சூருவளி தோட்டத்துக்க நிண்ட மரத்தையெல்லாம் முறித்து எறியுமெண்டு நான் கனவுகூடக்கண்டதில்ல. இண்டைக்கு தோட்டமெண்ட பேரில வெறும் பூமிதான் தம்பி கிடக்கு. புயலுக்குப் பிறகுவைச்ச தென்னம் பிள்ளைகள் வளர்ந்து பிரயோசனம் தாற நேரம் நான் இருக்கனே! இல்லையோ! இந்த அழிவால அடவுவெச்ச வீடு வளவையும் திருப்பியெடுக்க முடியல்ல! காலக்கெடுவும் முடிஞ்சி போயித்து. ஊர்சிரிக்க வீடு வளவவிட்டுப்போட்டு எழும்ப வேண்டிய நில வந்துபோச்சி! இந்த இக்கட்டான நிலையில யிருந்து நீதான்னம்பி காப்பாத்தவேணும்," வீரகத்தி அழாக்குறையாகச் சொன்ஞன்.

ஆனந்தனுக்கு விழுங்கவும் முடியாத துப்பவும் முடியாத நிலை. தங்கை சித்திராவின் கல்யாணப் பிரச்சனை ஒருபக்கம் வீரகத்தியின் பரிதாபநிலை மறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பக்கம். கையில் அவனிடம் அவ்வளவு பணமில்லை. வங்கியில்தான் கொஞ்ச நஞ்சம் இருக்கிறது. அதையும் எடுத்து போதாததற்கு வேறுயாரிடமாவது கைமாறித்தான் கொடுக்க வேண்டும். கணநேரச் சிந்தனையின் பின் '' சரி தாறன் !'' என்று ஆனந்தன் சொன்னதும் வீரகத்தி அவனை மறந்த நிலையில் ஆனந்தனின் இரண்டு கைகளையும் பற்றிப்பிடித்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்து விடை பெற்றுக் கொண்டான். ஆனந்தன் தனக்குவந்த நெருக்கடியான நிலைகளை எண்ணிய படியே வீட்டை நோக்கி நடந்தான்.

'அண்ணை, அடிச்சான் பிறைஸ்!'

'என்னடா சின்னவா நீ சொல்லு!'

'அண்ணே, உண்மையில சித்திரா கொடுத்து வச்சிப் பிறந்தவள்தான்! மாப்பிளைப் பையனுக்கு சித்திராவை மாத்திரம் தந்தாலே போதுமாம்! ஆதனம் சீதனம் எதுவுமே வேணுதாம்! இந்த இருபதாம் நூற்றுண்டில இப்பட்டப்பட்ட மாப்பிளைகள் இருக்கிறதே உலக அதிசயம்தான்.'

சித்திராவின் திருமண விசயமாக மாப்பிள்ளை வீட்டாரோடு பேசிவந்த முழு விபரத்தையும் சின்னவன் ஆனந்தனிடம் ஆதியோடந்தமாகச் சொன்னுன்.

ஆனந்தனுக்கு சொல்ல முடியாத மகிழ்ச்சி.

'சின்னவா, என்னுடைய பெரிய தலைப்பாரமொன்று இறங்கிப் போச்சிடா! இனிமே நான் செத்தாலும் காரியமில்ல' என்று சொல்லிய வாறே சின்னவனைப் பார்த்தான்.

'அண்ணே, இதென்னண்ணே உங்கட பேச்சும் கதையும்! நாங்க மட்டும் வாழ்ந்தாப் போதுமா? நீங்களும் எங்களப்போல குடும்பம் பிள்ளைகுட்டி யென்று வாழ்ந்து பார்க்க வேணுமா?' இப்படி சின்னவன் சொல்லி முடிக்கவும் அங்கே ஆனந்தனின் தாய் பாக்கியம் வரவும் சரியாக இருந்தது.

தாயிடம் ஆனந்தன் சின்னவன் மாப்பிள்ளை வீட்டுக்குப் போய்வந்த எல்லா விஷயங்களையும் விளக்கமாகச் சொன்னுன் அதைக்கேட்டதும் அவள் மனம் ஓடிக்குளிர்ந்தது அவள் தன்னையே மறந்து சில விஞடிகள் ஏதோ கற்பனையில் ஆழ்ந்துவிட்டு 'எல்லாம் ஆண்டவன் செயல்தான்' என்று சொல்லிமுடித்தார். மிக விரைவாகவே சித்திராவின் திருமணமும் நடந்தேறின.

ஒரு குடும்பத்தில் தொடர்பாக துன்பமான சம்பவங்கள் நடைபெற்றுவந்தால் இன்பமான காரியங்களும் தொடரப் போகின்றன என்பது அநுபவ ரீதியான உண்மைதான் என்பதை ஆனந்தன் எண்ணிப் பார்த்தான்.

சித்திராவின் திருமணத்திற்குப் பிறகு ராமு அட்வான்ஸ் லெவலில் தேறி வாசிற்றிக்குள்ளும் நுழைந்துவிட்டான்.

செல்லையா வத்தைவிட்ட காலத்திலிருந்த செல்வாக்கையும், சிறப்பையும்விட இப்போது அந்தக் குடும்பத்தில் மேலும் கீர்த்தியும் புகழும் அதிகரிக்கத் தொடங்கியது.

வீரகத்தி கேட்டபடி ஆனந்தன் பணத்தை கடனுகக் கொடுத்த நாளிலிருந்தே வீரகத்தியும் மனைவியும் நேரம் கிடைத்தபோதெல்லாம் வந்து பாக்கியத்தோடு அன்னியோன்னியமாக பழகத் தொடங்கினுர்கள். தங்களுக்கு இல்லாவிட்டாலும் வீரகத்தியின் வீட்டிற்கு அடிக்கடி நல்லநல்ல மீன்களை பாக்கியமே கொடுத்துதவிக் கொண்டிருந்தாள். மொத்தத்தில் ஜெயந்திக்கும் ஆனந்தனுக்கும் திருமணம் நடக்காத குறையே தவிர மற்றப்படி அந்த இரு குடும்பங்களும் மிக நெருக்கமாகிக் கொண்டன.

காலத்தின் வேகத்திற்கு ஈடுகொடுத்து முன்னேற முடியாவிட்டாலும் அந்தக் கிராமம் பழைய நிலையிலிருந்து ஓரளவிற்கு விடுபட்டு கொஞ்சம் முன்னேற்றமடையத் தொடங்கியிருந்தது.

ஆனந்தனின் கடின உழைப்பால் அவன் குடும்பம் முன்னேறியது மாத்திரமல்ல அவன் வயதையொத்த பல இளைஞர்களின் ஆர்வத்தால் பல குடும்பங்கள் அந்தக் கிராமத்தில் பிரகாசிக்கத் தொடங்கின.

மீன்பிடிச்சங்கம், சனசமூக நிலையம், மாதர் சங்கம், விளையாட்டுக் கழகம் என்று பல அமைப்புகள் உருவாகியதன் பலன் அந்தச் சிறிய கிராமத்தில் வாழும் இளைஞர்கள் மத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தியில் மாத்திரமல்ல சிறுவர்கள், முதியவர்கள், பெண்களுக்குள்ளும் ஒருவித சுறுசுறுப்பு - உற்சாகம் கரை புரண்டோட எங்கள் கிராமம் என்ற உணர்வு மேலோங்கி எழத் தொடங்கியதைக் காணக்கூடியதாகவிருந்தது.

கடற்க்கரையோரம் கட்டப்பட்ட அழகான சிறிய வாசிகசாலைக்குள் எந்நேரமும் பெரியவர்களும் சிறியவர்களும் அன்றாடச் செய்திகளை அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டியபடியிருப்பதைப் பார்க்க மகிழ்ச்சியாகவிருந்தது.

யுனிசெப் ஆதரவில் வீட்டுக்குவீடு மலசல கூடங்களும் கிணறுகளும் கட்டப்பட்டு அந்தக் கிராமத்திற்கு ஒரு பொலிவைக் கொடுத்துக்கொண்டிருந்தது. இன்னுமொரு பெரிய விஷயமென்னவெனில் முதல் தடவையாக அந்தக் கிராமத்திலிருந்து ஆனந்தனின் தம்பி ராமுவோடு சேர்ந்து மூன்று மாணவர்கள் வாசிற்றிக்கு கலைப் பிரிவில் எடுபட்டிருந்தார்கள்.

இவர்களுக்கெல்லாம் காரணகர்த்தாக்கள் ஆனந்தனின் தலைமையில் இயங்கிய அந்தக் கிராமத்து இளைஞர்கள்தான் என்பது எல்லோருக்கும் வெளிச்சம்.

''சிறுபிள்ளை செய்த வேளாண்மை வீட்டுக்கு வராது'' என்ற கதையைப் பொய்ப்பித்துவிட்ட இந்த இளைஞர்களின் உள்ளுணர்வுகளை அறிந்து அக்கம்பக்கத்துக் கிராமத்தவர்களே பெருமைப் பட்டார்கள் என்றால் கிராமம் முன்னேறித் தானிருக்கிறது என்பதை யாவருமே ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

# தொடர்கதை

ஆதன சீதனமாக மாப்பிள்ளை வீட்டார் எதுவும் கேட்காமல் விட்டாலும் ஆனந்தனும் பாக்கியமும் சித்திரா — இருவரின் பெயருக்கும் அந்த தாயதி வீடுவளவை எழுதி பணமாகவும் இருபத்தையாயிரம் ரூபாவைக் கொடுத்திருந்தார்கள். இவைகளைவிட சித்ராவிற்குகாப்பு, மாலை, மோதிரமென்று நகைகளும் கொடுக்கப்பட்டிருந்தன.

சித்திரா, கணவன், பாக்கியம், ராணி, ராமு, ஆனந்தன் என்று அந்தக் குடும்ப அங்கத்தவர்கள் பழையபடி ஆறு பேர்களாகிவிட்டனர். செல்லையாவின் இடைவெளியை சித்திராவின் கணவன் நிறைத்து நின்றான். ராமு வாசிற்றியிலும், இவ்வளவு காலமும் ஒட்டிக்கிடந்த சின்னவன் அவன் மாமன் வீட்டிலும் இடம் மாறிக்கொண்டதால் அந்த வீட்டில் வழமையான குதூகலத்தைக் காணமுடியவில்லை. ஆனந்தனும் பகல் இரவென்று வாடியிலேயே தங்கக் கொண்டான். ராணியும் சனி, ஞாயிறு தவிர்ந்த நாட்களில் வேலைக்குப் போய்விடுவாள்.

இதனால் வீட்டில் சித்திராவும் கணவனும் பாக்கியமும் தான் மிச்சம்.

நாட்கள் வாரங்களாகி மாதங்களாகி வருடங்களாகிக் கொண்டிருந்தன. ஒருநாள் சற்றும் எதிர்பாராதவிதமாக வீரகத்தி ஆனந்தன் கொடுத்த பணத்தையும் அதற்கான வட்டிப் பணத்தையும் கொண்டு வந்து கொடுத்தான்.

ஆனந்தன் வட்டிப் பணத்தை வாங்காமல் முதலை மாத்திரம் வாங்கிக்கொண்டான்.

'என்ன இருந்தாலும் இவ்வளவு அவசரப்பட்டு நீங்கள் தோட்டத்தை விற்றிருக்கக் கூடாது!' என்று ஆனந்தன் சொன்னபோது,

அதுக்கென்னதம்பி செய்யிற எனக்கும் வயதுபொயித்து கிழ்கண்ட ஆண்பிள்ளைகளும் இல்ல. உள்ளது ஒரேயொரு பிள்ளை. அவளுக்கு இருக்கிற வீடுவளவே போதும்! தோட்டம் துறவென்று பாடுபட்டு ஆருக்காக நான் சம்பாதிக்க வேணும்! அதோட என்னப் பொறுத்த வரையில நான் எப்போதுமே கடனாளியாக வாழ விரும்பாதவன். இருந்தாப் போல நாளைக்கு நான் திடீரெனக் கண்ண மூடித்தனென்டால் நான்பட்ட கடன் பாரம் என்ர பெண்சாதி பிள்ளட தலையில ஏறிக் குந்திக்கொள்ளும் இப்படிச் சொல்லும்போதே வீரகத்தியின் கண்கள் லேசாக பனித்தன.

ஆனந்தன் எதுவுமே பேச முடியாமல் அப்படியேநின்றான்.

அப்போது வீரகத்தி ஆனந்தனின் இரண்டு கைகளையும் இறுக்கமாகப் பிடித்து 'தம்பி ஆனந்தன் உன்னைத்தான் நான் மலை போல நம்பியிருக்கிறன். என்னக் கை விடமாட்டாயே; என்று கரகரத்த குரலில் கேட்டான்.

— தொடரும் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சுவைக்கச் சில துளிகள்

## சண்டை போட்டார்கள் சாதனை படைத்தார்கள்

முரட்டுப் பையன் ஒருவன் தன்னைக் காட்டிலும் பலவீனனாயிருந்த ஒரு பையனை அடிக்கத் தொடங்கினான். அப்போது மற்றொரு சிறுவன் அந்த வழியாக வந்தான் அவனுக்கு அந்த முரடனை சமாளிக்கக் கூடிய அளவுக்குப் பலம் இல்லை. எனினும் முரடன் தன்னைக் காட்டிலும் பலவீனமானவனை அடிக்கிறானே என்று கோபம் கொண்டான். பிறகு கோபத்தை ஒருவாறு அடக்கிக்கொண்டு முரடனிடம் போய் "எத்தனை அடிகள் அவனுக்குக் கொடுக்கப் போகிறாய்'' என்று கேட்டான் "ஏன்டா கேட்கிறாய் பயலே? என்று முரடன் கூச்சலிட்டான்'' அவனுக்கு நீ கொடுக்க விரும்பும் அடிகளில் பாதியை எனக்குக் கொடுக்கலாம் என்பதற்காகத்தான் கேட்கிறேன் என்றான் அந்தச் சிறுவன். முரடன் வெட்கமுற்றான். இப்படிப்பேசி முரடனின் உள்ளத்தை உருகச் செய்த பள்ளிச் சிறுவன் தான் பிற்காலத்தில் இங்கிலாந்தின் பெரிய கவிஞராகத் திகழ்ந்த 'பைரன்' ஆவார். அடிபட்ட சிறுவன் இங்கிலாந்தின் பிரதம மந்திரியாக விளங்கிய ரொபர்ட் பீல் அவர்கள்.

## ஓர் ஆயர் பேசுகிறார்

''திருச்சபை இறையரசின் பணியாளராகத்திகழ உலகில் நிலவும் அநீதியினை மட்டுமன்றி தன்னுள் நிலவும் அநீதிகளையும் அகற்றப் பாடுபட வேண்டும்''

''திருச்சபையிலுள்ள அதிகாரங்களும், பொறுப்புக்களும் பொது நிலையினரோடு இன்னும் அதிகமாகப் பகிர்ந்துகொள்ளப்பட வேண்டும்.''

''அரசியல் உணர்வும் ஈடுபாடும் எல்லாக் கிறீஸ்தவர்களுக்கும் இன்றியமையாதது. இத்துறையில் குருக்களது முக்கிய பணி பொது நிலையினரிடம் அரசியல் விழிப்புணர்வையும், ஈடுபாட்டையும் வளர்த்தலாகும். குருக்களின் அரசியல் ஈடுபாடு பதவிக்காக அல்லாமல் சேவை எனும் அடிப்படையிலே அமையவேண்டும்.''

''மனித முன்னேற்றத்திற்காக சமுதாய மாற்றத்தை அடிப்படையாக கொண்டுள்ள முற்போக்குக் கட்சிகளுடனும், தொழிற்சங்கங்களுடனும் பொறுப்புணர்வோடும், விவேகத்தோடும் நாம் ஒத்துழைத்துப் பணியாற்ற வேண்டும்.''

''நீதிக்காக மனித உரிமைகளுக்காக நடாத்தப்படும் போராட்டங்களின்போது வெறும் பார்வையாளராக நமது மறைமாவட்டம் இராமல் அந்தப் போராட்டங்களுக்கு ஆதரவளித்து அவற்றில் கலந்துகொள்ள வேண்டும்.''

''எளிய மக்களை ஒடுக்கும் சமுதாய அமைப்புக்களே தம்மில் வன்முறையானவை தான். இந்த வன்முறையான அமைப்புக்களை மாற்றும் முயற்சியில் ஏனைய வழிமுறைகள் அனைத்தும் பயனற்றுப் போகும்போது வன்முறையை கையாளுவது தற்காப்பிற்காகவும், அனைவரையும் முழுமையாக வாழவைப்பதற்கும் செய்யப்படுவதாகும். இது விவிலிய இறையியல் கண்ணோட்டங்களுக்கு எதிரானது என நாம் கூறிவிடமுடியாது.''

**ஆயர் மரியானுஸ் ஆரோக்கியசாமி**
கோட்டாற்று ஆயர் (தமிழ் நாடு).


(கோட்டாற்று மறைமாவட்டத்தில் 'கிறீஸ்தவ வாழ்வும் பணியும்' என்னும் மடலிலிருந்து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி - 41

(பிலிப்பியருக்கு எழுதிய திருமடல்)




பரிசு :

ரூபா 50/-, 25/-

முடிவுத் திகதி:

**30 - 5 - 87**

முழுப்பெயர்: ....................................................................................................

முகவரி : ....................................................................................................

....................................................................................................

## இடமிருந்து வலம்

1. சின்னப்பர் தான் இவற்றை நாட வில்லை என்கிறார்.
4. வானவர்
6. இதனைப் பெறவும் சின்னப்பர் ஓடுன்கிறார்
7. இவருடைய வீட்டைச் சேர்ந்தவர்களும் வாழ்த்துக்கள் தெரிவித்துள்ளனர்
8. கிறிஸ்துவுக்கு இதனை விளங்கச் செய்வதே சின்னப்பரின் பேராவல்
10. இதில் பங்குபெற சின்னப்பருக்கு விருப்பம்.
12. .இறப்பு
13. நெறி கெட்டவர்களுக்கு முடிவு இல்லையா?
14. இதயத்தைக் குறிப்பது
15. மீட்பின் சின்னம் சீர்குலைந்து விட்டது

## மேலிருந்து கீழ்

1. நல்ல பண்பு
2. அழுகையிலும் விளைவது
3. வாழ வழி வகுப்பவை
5. ஒரு சிலருக்கு இதுதான் கடவுளாம்
9. கடந்து நிற்பவர்
11. மக்களைப் பிளவு படுத்துவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி - 39 முடிவுகள்

## இடமிருந்து வலம்

1. செபங்கள்
3. சைத (தசை)
5. கைவேலை
6. வறியவர்கள்
7. வார்த்தை
9. க்ண்ள்க (கண்கள்)
10. பரி
11. வாள்
12. எபேசு
14. ள்கனிக (கனிகள்)
15. அதிகாரம்
16 நாள்

## மேலிருந்து கீழ்

1. செல்வங்க்ள்
2. க்ணவர்கள்
4. தலை
8. வாரிசுகள்
13. நீதி

## பரிசு பெறுவோர் :

*1ம் பரிசு :*

ப. தேவராஜா
31/1 லேடி மெனிங் ட்றைவ்
புளியடிக்குடா
மட்டக்களப்பு

*2ம் பரிசு :*

செல்வன். G. மரியதாசன்
6/79 A 6ம் கொலனி
சொறிக்கல்முனை
சம்மாந்துறை

## பாராட்டுப் பெறுவோர் :

1. மா. தெரேஸ் றீற்று
றோ. க. ஆலயம்
இரட்சகர் புரம்
அக்கரைப்பற்று

2. விமலா அன்ரனி
29/1 வாவி வீதி - 1
மட்டக்களப்பு

3. D. வீமா றோசலின் குரூஸ்
சகாயபுரம்
மூதூர்

4. கே. எம். கிறிஸ்டி
இருதயபுரம்
மூதூர்

5. பிரான்சிஸ் ஜே. வலன்ரைன்
'மேரி இல்லம்'
வட்டவிதானை வீதி
கல்முனை

பங்குபற்றியோர்: 56 பேர்

சரியான விடையளித்தோர்: 39 பேர்

அனைவருக்கும் எமது நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# காற்றில் கலந்து வரும்



நாள்: 9, 10, 11 - 5 - 87 நேரம்: காலை 5 - 50 மணி

## கத்தோலிக்க நற்சிந்தனை

வழங்குபவர்:- அருள் செல்வி டெலாமேரஸ் அவர்கள்

நாள்: 12 - 5 - 87 நேரம்: மாலை 8 - 45 மணி

## சிறுவர் உலகம்

❋ விவிலியக்கதை

நாள்: 17 - 5 - 87 நேரம்: மாலை 8 - 00 மணி

## புதிய உலகம்

❋ மீட்பின் பாதையில் பேசும் பாத்திரங்கள் அங்கம் - 8

❋ கருத்துரை — அருள் திரு. பிரான்சிஸ் வின்சன்ற் - தமிழ்நாடு

நாள்: 23, 24, 25 - 5 - 87 நேரம்: காலை 5 - 50 மணி

## கத்தோலிக்க நற்சிந்தனை

வழங்குபவர்: அருள்திரு. பிரான்சிஸ் வின்சன்ற் அவர்கள்

நாள்: 26 - 5 - 87 நேரம்: மாலை 8 - 45 மணி

## சிறுவர் உலகம்

❋ ஒழுக்கம் விழுப்பம் தரும் - சிந்தனை

நாள்: 31 - 5 - 87 நேரம்: மாலை 7 - 00 மணி

## புதிய உலகம்

❋ இதமான சுமைகள் — நாடகம்

❋ மனித உழைப்பு — சிந்தனை உரை

— நிகழ்ச்சித் தொகுப்பு - மலர்வேந்தன் —

(இஸ்லாமிய சகோதரர்களின் நோன்புக் காலத்தில் ஒலிபரப்பு நேரம் மாற்றப்பட்டுள்ளதை கவனத்திற்கொள்க!)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




## அனைத்தும் நன்று

பங்குனித் திங்கள் தொண்டன் வாசித்தேன். அதில் இடம் பெற்ற ஆக்கங்கள் அனைத்தும் சிறந்தவையே. அவற்றுள் 'இறப்பில் மலர்ந்த தனித்துவம்' கட்டுரையும், உறவுகள் மலரட்டும் கவிதையும் நன்றாக அமைந்திருந்தன.

மா. சு. வின்சன்ட்
கொழும்பு - 15.

## தொடக்கத்தில் கிடைக்கட்டும்!

பங்குனித் தொண்டன் மாதத் தொடக்கத்திலேயே கிடைத்தது. இம்மாதிரி தொடர்ந்து கிடைக்க வேண்டுகிறோம்.

இறப்பில் மலர்ந்த தனித்துவம், பலியும் வாழ்வும் என்னும் படைப்புக்கள் பங்குனித் தொண்டனில் சிறப்பாக இருந்தன.

A. P. பெர்னாண்டோ
கொழும்பு - 13.

## பிசிறு அடிக்கிறது

பங்குனித் திங்கள் தொண்டனில் ''பலியும் வாழ்வும்'' என்னும் கட்டுரைத் தொடரின் பதினான்காவது பந்தியில் 'மெழுகு வர்த்தி, காணிக்கை..... மூடத்தனந்தானே' எனக் குறிப்பிட்டிருப்பது. கட்டுரை ஆசிரியரின் கருத்தில் எங்கோ 'பிசிறு' அடிப்பதையே காட்டுகிறது.

'பூவரசன்'
பாலையூற்று

(பூவரசனார் அவசரப்பட்டு படித்து, அர்த்தத்தை கோட்டை விட்டார் போல் தோன்றுகிறது. உள்ளம் இறைவனுக்கு தூரமாயிருக்கும் போது காணிக்கைகளால் மட்டும் இறை அருளை வழங்கிவிட முடியாது என்றே கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருந்தது. கண்ணை கசக்கிவிட்டு மீண்டும் ஒரு முறை படித்துப் பாருங்கள்.)

## அர்த்தமுள்ள வண்டுமணி!

தவக்காலத்தைப் பற்றி வண்டு மணியின் வாயாடித்தனம் அர்த்தமுள்ளதாகவே அமைந்து சிந்தனைக்கு விருந்தானது. இப்படிப்பட்ட பகுதிகளை வெளியிடுவது நலமாகும்.

றுபின்டன் போ
பாலையூற்று.

## அறிந்து கொண்டேன்!

சுதந்திரம் என்ற சிறுகதையிலிருந்து சுதந்திரம் என்றால் என்ன என்று நானும் அறிந்து கொண்டேன்.

தி. வரதன்
பெரியகல்லாறு.

## உண்மை - துணிவு வாழ்க!

உள்ளதை உள்ளபடியும், துணிவுடனும் கூறும் தொண்டனை நான் வாழ்த்துகிறேன்! ஆனால், மாத நடுப்பகுதியில் எமக்கு கிடைக்கும் தொண்டனை முதல் வாரத்தில் கிடைக்கச் செய்ய முடியாதா?

R. ஜஸ்ரினா பிரியதர்ஷினி
பெரியகல்லாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## கவிஞருக்குப் பாராட்டு

தொண்டனை இலக்கிய வழியில் அலங்கரித்து வரும் நிலாதமிழின் தாசனுக்கு பாரட்டுக்கள் அவரது ஆக்கங்கள் தொடரட்டும்.

மாஸ்டர் றூபஸ்
சொறிக்கல்முனை.

## நீங்காது நினைவில்! . .

பங்குனித் தொண்டனில் வெளிவந்த சுதந்திரம் என்னும் சிறுகதையும், எனக்கென எதுவுமில்லை என்னும் கவிதையும் நினைவில் நிற்கின்றன.

என். யேசுதாசன்
மட்டக்களப்பு.

## அனைவரையும் கவர்ந்த . . .

'திருமறையைத் தெரிந்து கொள்வோம்' பகுதி தொண்டன் வாசகர்களுக்கு ஒரு வரப்பிரசாதம் என்றே கூற வேண்டும். ஆனால் ஒரு கேள்விக்கு மட்டும் விடை அளிப்பது தான் கவலைக்குரியது.

தொண்டனுக்கு பிற சமய அன்பர்களும் ஆக்கங்கள் அனுப்புவதிலிருந்து அவர்களையும் தொண்டன் கவர்ந்துள்ளதை அறிய முடிகிறது.

J. அருளப்பு
அம்பாறை.

## சுவையான விருந்து

விருந்தோம்பல் என்னும் கட்டுரை பாராட்டதக்க விதத்தில் அமைந்துள்ளது. எழுதியவருக்கு நன்றி

A. உதயகுமார் கொறேயிரா
மூதூர்.

## பாராட்டு!

சர்வதேச கத்தோலிக்க பத்திரிகை அமையத்தின் 14 வது மாநாட்டு அனுபவங்களை தொண்டன் வாயிலாக எம்மோடு பகிர்ந்து கொள்ளும் கலையுலகனுக்கு எமது பாராட்டுக்கள்.

ஞா. அல்பேட்
பாலையூற்று.

## மதியும் மதிமுகமும்

மதியில் களங்கமுண்டு. மதிமுகத்திலும் மறுக்கள் உண்டு. மதியில் உள்ள களங்கம் நிலவுக்கு அழகைத் தருகிறது. மதிமுகத்திலுள்ள மறுக்களும் அழகைத் தருகின்றன. அவைகள் Beauty Spots அல்லவா? இந்த Beauty Spots இல்லையே என்று ஏங்கும் சினிமா நட்சத்திரங்கள் செயற்கையாக அவற்றை முகத்தில் வைத்துக் கொள்கின்றனர்.

வாழ்விலும், களங்கங்களும், குறைகளும் வந்துதானாக வேண்டும். அவைகளை Beauty Spots ஆக ஏற்றுக் கொள்ள வேண்டும். அதற்காக முகம் எல்லாம் Beauty Spots ஆக இருக்க முடியுமா? வாழ்விலும் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் களங்கம் நேரிட்டால் அதை இயற்கை என எடுத்துக் கொள்ளலாம். ஆனால் வாழ்வு முழுவதும் குறைகள் நிறைந்து விட்டால் அவைகள் Beauty Spots அல்ல Ugly Spots அவைகளை அலங்கோலம் என வெறுத்து ஒதுக்க வேண்டும்.

— சேவியர் ஜோதி —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Registered as a News Paper in Sri Lanka.

அனைத்திலங்கை ரீதியில் 'தொண்டன்' நடாத்தும்

# சிறுகதைப் போட்டி

## மொத்தப் பரிசு 1000/-

- ★ கிறித்தவ — சமூகச் சிந்தனைகளைக் கதைகள் கருவாகக் கொண்டிருக்க வேண்டும்.
- ★ முழுத்தாளில் (ஒரு பக்கத்தில் மாத்திரம்) நான்கு பக்கங்களுக்கு மேற்படாமல் (ஏறக்குறைய 1000 சொற்கள்) எழுதப்படவேண்டும்.
- ★ சொந்த ஆக்கமாகவும், பிரசுரிக்கப்படாததாகவும் இருத்தல் அவசியம்.
- ★ எதிர்வரும் ஜூலைத்திங்கள் 30ம் நாளுக்கு முன் கிடைக்கக் கூடியதாக ஆசிரியர் பெயருக்கு முகவரியிட்டு அனுப்பி வைக்கவும்.
- ★ கடித உறையின் இடது மேல்மூலையில் 'சிறுகதைப் போட்டி' எனக் குறிப்பிட்டிருக்க வேண்டும்.
- ★ போட்டிக்கு அனுப்பப்படும் கதைகள் திரும்ப அனுப்பப்பட மாட்டாது.
- ★ பரிசு பெறத் தவறும் தரமான கதைகள் 'தொண்டன்' இதழில் பிரசுரிக்கப்படும்.
- ★ போட்டி முடிவுகள் காலக்கிரமத்தில் 'தொண்டன்' சஞ்சிகையிலும், தனிப்பட்ட ரீதியிலும் அறிவிக்கப்படும்.
- ★ நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

இச்சஞ்சிகை மட்டக்களப்பு, புனித செபஸ்தியார் அச்சகத்தில் அச்சிட்டு தொண்டன் ஆசிரியர் [illegible] - 1987ல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media